# இலங்கை

## மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான தேசிய செயற்திட்டம்

## 2011 - 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்க அட்டவணை


அறிமுகம் .......... 3 - 6

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் .......... 7 - 30

பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள் .......... 31 - 46

சித்திரவதையினைத் தடுத்தல் .......... 47 - 60

பெண்களின் உரிமைகள் .......... 61 - 70

தொழிலாளர் உரிமைகள் .......... 71 - 76

புலம்பெயர்ந்த தொழிலாளர் உரிமைகள் .......... 77 - 96

சிறுவர் உரிமைகள் .......... 97 - 122

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் உரிமைகள் (IDP) .......... 123 - 134

குழு அங்கத்துவம் .......... 135 - 141



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் பற்றிய அறிமுகம்

## பின்புலம்

காலனியாட்சியின் வரலாற்றினையும், அண்மைக்கால ஆயுத மோதல் வரலாற்றினையும் கொண்டுள்ள இலங்கையிலே, மனித உரிமைகள் தொடர்பாக நிலவுகின்ற நிலைமையினைக் கவனத்தில் கொள்ளுமாறு மக்கள் விடுத்த அழைப்பிற்கு பதிலளிக்குமுகமாகவே முதலில் தேசிய செயற்திட்டத்தினை உருவாக்கும் முக்கியமான முயற்சியில் இலங்கை அரசாங்கம் காலடி எடுத்து வைத்தது. இரண்டாவதாக, 1993லே ஆஸ்திரியாவின் வியன்னாவிலே நடைபெற்ற மனித உரிமைகள் பற்றிய உலக மகாநாட்டிலே ஏற்று அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டிற்கான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வியன்னா பிரகடனத்தின் பரிந்துரைகள் ஆகியவற்றிற்கான அரசாங்கத்தின் பதிலே தேசிய செயற்திட்டமாகும்..

> *'மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்தக்கூடிய படிகளை அடையாளம் காண்பதற்காக தேசிய செயற்திட்டத்தினை வரைவதற்கான ஆர்வத்தினை ஒவ்வொரு நாடும் கருத்தில் கொள்கின்றன'*

சகல மனித உரிமைகளும் சர்வதேச ரீதியானவை, பிரிக்க முடியாதவை, ஒன்றில் ஒன்று தங்கியிருப்பவை மற்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை என்பதையும் சனநாயகம், அபிவிருத்தி மற்றும மனித உரிமைகளுக்கான மரியாதை மற்றும் அடிப்படைச் சுதந்திரம் ஆகியவை ஒன்றில் ஒன்று தங்கியிருப்பவை என்றும், பரஸ்பரம் ஒன்றை ஒன்று வலுப்படுத்துபவை என்றும் வியன்னா பிரகடனமும், செயற்திட்டத்திற்கான நிகழ்ச்சித்திட்டமும் வலியுறுத்துகின்றன. மூன்றாவதாக, 2008 மே மாதம் நடைபெற்ற சர்வதேச பருவகால மீளாய்வின்போது, நாட்டிலே மனித உரிமை நிலைமைகளை முன்னேற்றுவதற்கு தேசிய செயற்திட்டத்தினை வகுப்பதாக அரசாங்கம் வாக்குறுதியளித்தது.

சாதகமான மாற்றத்தினைக் கொண்டு வருவதற்காக உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதென அரசாங்கமும் மக்களும் சேர்ந்து எடுத்த தீர்மானத்தின் விளைவே இச் செயற்திட்டமாகும். செயற்திட்டத்தினை உருவாக்குகையில், மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்காக அமுலிலுள்ள நடவடிக்கைகளை அரசாங்கம் மதிப்பிட்டதுடன், முன்னேற்றப்படவேண்டிய பரப்புக்களை அடையாளம் கண்டது. அத்துடன் மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதனை முன்னேற்றுவதற்காக எம்மைக் கடப்பாடு கொள்ளச் செய்தது.

மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான இந்தத் தேசிய செயற்திட்டமானது, அரசாங்கமும் சிவில் சமூகமும் சேர்ந்து பல மாத காலமாக நடத்திய மதியுரை ஆலோசிப்புக்கள் மற்றும் ஒத்துழைப்பின் பலனேயாகும். மனித உரிமைகளை மேம்படுத்திப் பாதுகாப்பதில் கவனம் குவிக்கின்ற இத் தேசிய செயற்திட்டத்தினை உருவாக்குவதில் இந்தப் பங்கேற்புமிகு முறையிலான பாதையினைப் பின்பற்றியமை தொடர்பாக இலங்கை அரசாங்கம் பெருமைப்படுகின்றது. மேலும், திட்டத்தினை உருவாக்குவதற்கான செயன்முறையானது, திட்டத்தின் பெறுபெற்றினைப் போன்றே முக்கியமானது எனவும் உறுதியாக நம்புகின்றது. இந்த ஆவணமானது, அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அடைந்து கொள்வதற்கான விரிவான கொள்கை மற்றும் சட்டவாக்க நிகழ்ச்சித்திட்டங்களை மாத்திரம் வழங்காமல் இந்த உரிமைகளையும் சுதந்திரங்களையும் விரிவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

சர்வதேச பருவகால மீளாய்வின் போது மேற்கொள்ளப்பட்ட வாக்குறுதியினைத் தொடர்ந்து(UPR), அப்போதைய அமைச்சான அனர்த்த முகாமைத்துவ மனித உரிமைகள் அமைச்சினைப் பிரதான முகவராகக் கொண்டு அதன்மூலம் செயற்திட்டத்தினை உருவாக்கும் செயன்முறையினை அரசாங்கம் ஆரம்பித்தது. இதன் முதற்படியாக, பின்வரும் செயற்பாடுகள் மூலமாக நாட்டிலே காணப்பட்ட மிகவும் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய மனித உரிமைப் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்காக நிலைமைகளைக் கண்டறியும் நடவடிக்கைகளில் அமைச்சு ஈடுபட்டது: இதில் ஒப்பந்தங்களின் பரிந்துரைகளைத் தொகுத்தல், விசேட செயலமுறை பரிந்துரைகள், UPR பரிந்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள், செயன்முறைக்கான சிவில் சமூகத்தின் உள்ளீடுகள், மற்றும் மனித உரிமை நிலைமைகளுடன் தொடர்புடைய தேசிய அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளை தொகுத்தல் போன்றன அடங்கும். மனித உரிமைகள் சர்வதேச ரீதியானவை, பிரிக்கப்பட முடியாதவை மற்றும் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பவை என்பதை அங்கீகரிக்கும் அதேவேளை, நிலவுகின்ற நிலைமைகளைக் கருத்தில் கொள்வதன் மூலமாக முக்கியத்துவம் வாய்ந்த எட்டு பரப்புகள் அடையாளம் காணப்பட்டன: சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய இரண்டு பொதுவான பரப்புக்களும் சித்திரவதைகளைத் தடுத்தல், உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் உரிமைகள், தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்தல், சிறுவர் உரிமைகள், பெண்களின் உரிமைகள், புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் ஆகிய ஆறு விசேட பரப்புக்களும் அடையாளம் காணப்பட்டன. நிறுவனத்தின் கருவியாக கவனக்குவிப்புக்களுக்குரிய இப்பரப்புக்களைப் பயன்படுத்தி எட்டு விடய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. இவை எட்டு மதியுரைக்கலந்துரையாடல்களில் கலந்துரையாடப்பட்டன. இக்கலந்துரையாடல்களில் சம்பந்தப்பட்ட சகல அரசாங்க முகவர்களும் சிவில் சமூகப்பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இச்செயன்முறையின் அறிக்கையானது, 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவில் சமூக நிறுவனங்களுக்கான மதியுரைக் கலந்துரையாடலின் போது சமர்ப்பிக்கப்பட்டது. இச்செயன்முறையினைத் தொடர்ந்து தேசிய செயற்திட்டத்தினை வரைவதற்காக எட்டு வரைபுக் குழுக்கள் நிறுவப்பட்டன. ஒவ்வொரு வரைபுக் குழுவிலும் சம்பந்தப்பட்ட அரசாங்க முகவர்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் எட்டு முதல் பத்து வரையான நிபுணர்கள் உள்வாங்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு வரைபுக் குழுவிலும் அரசாங்கப் பிரதிநிதித்துவமும் சிவில் சமூகப் பிரதிநிதித்துவமும் சரியான எண்ணிக்கையில் அமைந்திருந்தன. எட்டு வரைபுக் குழுக்களும் தமது பணிகளை முடித்து அவற்றின் வரைபுகளை அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சிற்குச் சமர்ப்பித்ததும் அமைச்சானது தேசிய செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் வழிகாட்டலின் கீழ் இணைந்த வரைபினைத் தொகுக்க ஆரம்பித்தது. இவ்வழிகாட்டல் குழுவானது வரைபுக் குழுக்களின் தலைவர்களையும், ஏனைய சம்பந்தப்பட்ட நிபுணர்களையும் கொண்டிருந்தது.

2011 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற இலக்குக் குழுக் கலந்துரையாடலைத் தொடர்ந்து தேசிய செயற்திட்டமானது மேலும் மீளாய்வு செய்யப்பட்டு இறுதியாக்கப்பட்டது.

## செயற்திட்டத்தின் கட்டமைப்பு

செயற்றிட்டமானது, அது கொண்டுள்ள 8 தொனிப்பொருள்சார் பரப்புக்களையும் பிரதிநிதித்துவம் செய்தவாதாக 8 பகுதிகளைக் கொண்டுள்ளது. அவையாவன, கவனத்திற்குரிய பரப்புக்கள், இலக்கு, பிரச்சினை, செயற்பாடுகள், பிரதான செயல்நிறைவேற்றுகை குறிகாட்டிகள், காலச்சட்டகம், மற்றும் பிரதான பொறுப்புக்குரிய முகவர் நிலையங்கள் போன்றனவாகும்.

திட்டமானது குறுகிய காலத்தினைக் கொண்டுள்ளதாலும், தீர்க்கப்பட வேண்டிய சகல பிரச்சினைகளையுமே யதார்த்த பூர்வமாக அதனால் தீர்த்துக்கொள்ள முடியாது என்கின்ற காரணத்தினாலும், செயற்பாட்டிற்கான சகல பரப்புக்களையும் உள்ளடக்காது, பொதுவாக முன்னுரிமைக்குரிய பரப்புக்களை உள்ளடக்குவதே நோக்கமாக இருக்கின்றது. இருப்பினும் திட்டத்தினை வாசிக்கும் பொழுது ஒவ்வொரு தொனிப்பொருள்சார் பரப்பிலும் உள்ள பல அம்சங்கள் பூரணமாக உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகின்றது.

குறிப்பிட்ட பரப்புத் தொடர்பாக தேசிய கொள்கைகளோ அல்லது செயற் திட்டங்களோ காணப்படுமாயின், இவை கருத்தில் கொள்ளப்பட்டு பொருத்தமான இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இக்கொள்கைகள் மற்றும் சட்டங்களில் பல இன்னும் அமுல்படுத்தப்படவேண்டியவையாக இருப்பதனால், இக்கொள்கைகளினதும் சட்டங்களினதும் அமுல்படுத்தலினை ஓர் இலக்காக/விடயமாக/செயற்பாடாகக் குறிப்பிடுவதற்கு மேலதிகமாக, இக் கொள்கைகளினாலும் அல்லது உத்தேச சட்டங்களினாலும் உள்ளடக்கப்படும் மனித உரிமைகள் செயற்திட்ட விசேட பரப்புக்களில் அவற்றினை உள்ளடக்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

## அமுல்படுத்தலும் கண்காணிப்பும்

திட்டத்தினை அமுல்படுத்துவதனைக் கண்காணிப்பதற்காக அமைச்சரவை உப குழு ஒன்று நிறுவப்படும். குறிப்பிட்ட துறைகளைச் சார்ந்த சிரேஸ்ட அரசாங்க அதிகாரிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுவினால் இதற்கு உதவி வழங்கப்படும்.

தேவையேற்படும் போது சிவில் சமூகத்துடன் அல்லது வேறு அரச நிறுவனத்துடன் அல்லது வேறு நிறுவனத்துடன் கலந்துரையாடலை நடத்துவதற்கு கண்காணிப்புக் குழுவிற்குப் பொறிமுறை ஒன்று காணப்படும். இக் கலந்துரையாடல்கள் மூலமாகத் திட்டத்தினை கள மட்டத்தில் அமுல்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள் குழுவிற்கு அறிக்கையிடப்படலாம்.

இணையத்தளம் ஒன்றினை நிறுவுவதன் மூலமும் ஏனைய சமூக ஊடகங்கள் மூலமாகத் தொடர்பாடலை நடத்துவதன் மூலமும் திட்டத்தின் அமுல்படுத்தல் தொடர்பான கண்காணிப்பிலும் பின்னூட்டல் வழங்கலிலும் பரந்தளவில் பிரசைகளின் பங்கேற்பானது வசதிப்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை மேம்படுத்துவதற்கான இலங்கையின் கடப்பாடானது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்தினை இலங்கை ஏற்றுக் கொள்வதற்கு முந்தியதான உறுதியான வரலாற்றினைக் கொண்டிருக்கின்றது. சட்டவாக்கத்தின் மூலமும், நிறைவேற்றுக் கொள்கையின் மூலமும், 1947ம் ஆண்டின் அரசியலமைப்பின் மூலமும் மக்களுக்கு சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டன. மேலும் அதனைத் தொடர்ந்து வந்த குடியரசு அரசியலமைப்பின் மூலமும் இது மக்களுக்கு வழங்கப்பட்டது. இந்த ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, மனித உரிமைகளின் பல்வேறு பிரிவுகளின் கீழான இலங்கையின் சர்வதேச கடப்பாடானது பல்வேறு தேசிய சட்டவாக்கங்களினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை மேம்படுத்திப் பாதுகாக்கின்ற மேற்குறிப்பிட்ட செயன்முறைகளுக்கு மேலதிகமாக, அந்த உரிமைகளை அமுல்படுத்துவதில் நீதித்துறையும் சமமான செயற்திறன்மிகு வகிபாத்திரத்தினை வகித்தது.

அரசியலமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்தினை உள்ளடக்கியதன் மூலமும், 2007ம் ஆண்டின் 56ம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சட்டம் பற்றிய சர்வதேச சமவாயத்தினை இயற்றியதன் மூலமும், சமவாயத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள சர்வதேச கடப்பாடுகளுக்கு நியதிச்சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டது.

மனித உரிமைகளைப் பூரணமாக நிறைவேற்றி, அதற்கு உத்தரவாதம் வழங்குவதற்கான இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடானது, உரிமைகள் பற்றிய பூரணமான சட்டமூலத்தினை அரசியலமைப்பில் உள்ளடக்குவதற்கென மஹிந்த சிந்தனை வழங்கும் முன்மொழிவுகளுக்கு செயலூக்கம் வழங்குவதற்காக 2008ம் ஆண்டிலே ஒரு குழுவொன்றினை அமைத்ததன் மூலம் மேலும் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டது. அதன் பின்னர் உரிமைகள் பற்றிய ஒரு வரைபுச் சட்டமூலமானது உருவாக்கப்பட்டது. இதன் உள்ளடக்கத்திற்காக இது இப்பொழுது பங்கீடுபாட்டாளர்களினால் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

இருந்து வருகின்ற இச் செயன்முறைகளை வலுப்படுத்தி தற்போதைய ஆட்சியினை திடப்படுத்துவதையே தேசிய செயற்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனால் இச் செயன்முறைகளின் பூரண பயனைப் பெறுவதற்காக இவற்றின் அமுல்படுத்தல்களின் நவீன போக்குகளுக்கு அவற்றினால் இயைபுற முடியும். இக் குறிக்கோள்களை சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய முன்னுரிமைப் பரப்புக்கள் இக்குறிக்கோள்களை போதிய அளவிற்கு நிர்ணயிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சர்வதேச மனித உரிமை கடப்பாடுகளை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் | 1.1 | மனித உரிமைகளை மேம்படுத்திப் பாதுகாப்பதற்கான நிறைவேற்று மற்றும் நிர்வாகப் பொறிமுறைகளையும் செயற்பாடுகளையும் வரையறுத்து, குறித்துரைத்து, ஆளுகை செய்து ஒழுங்குபடுத்துவதில் சட்டவாக்க/ கொள்கையினை உருவாக்கல் | 1.1.a | மனித உரிமைகளை மேம்படுத்திப் பாதுகாப்பதற்கான நிறைவேற்று மற்றும் நிர்வாகப் பொறிமுறைகளையும் செயற்பாடுகளையும் வரையறுத்து, குறித்துரைத்து, ஆளுகை செய்து ஒழுங்குபடுத்துவதில் சட்டவாக்க/ கொள்கையின் தேவை | மனித உரிமைகள் பற்றிய அமைச்சரவை உப குழுவினை நிறுவுதல் | அமைச்சரவை உப குழு நிறுவப்பட்டுள்ளது. | 1 மாதம் | அமைச்சர்களின் அலுவலகம் |
| | | | | | | அமைச்சர்களுக்கான உரிமைகளின் சட்டமூலத்தினை வரைவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையினை மீளாய்வு செய்தல் | மீளாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | 1 மாதம் | நீதி அமைச்சு |
| | | | | | | அமைச்சினுள் அர்ப்பணிப்புமிகு பிரிவுகளை நிறுவுதல்<br><br>1) அமைச்சரவை உபகுழுவின் பணிகளுக்கு உதவுவதற்கும்<br><br>2) மனித உரிமைகள் பற்றிய சமவாயங்களை ஏற்று நடைமுறைப்படுத்தல் தொடர்பாக எடுக்கப்படவுள்ள நிலைப்பாடுகளையும், சர்வதேச மன்றுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய விவாதங்களையும், மனித உரிமை சமவாயங்களின் வாக்கெடுப்பின் போது எடுக்கப்பட வேண்டிய நிலைப்பாடுகள் தொடர்பாகவும் மதியுரை வழங்குதல் | அர்ப்பணிப்புமிகு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது | 6 மாதங்கள் | மனித உரிமையினை மேம்படுத்துகின்ற |
| | | 1.2 | மனித உரிமைகள் பற்றிய இலங்கையின் சர்வதேச கடப்பாடுகள் பற்றிக் கடமைப் பொறுப்புடையோர் மத்தியிலும் உரிமை கோருவோர் மத்தியிலும் அதிகரிக்கப்பட்ட விழிப்புணர்வு | 1.2.a | கடமைப் பொறுப்புடையோர் மத்தியிலும் உரிமை கோருவோர் மத்தியிலும் மனித உரிமைகள் தொடர்பாக போதிய விழிப்புணர்வின்மையும் போதிய அறிவின்மையும | மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் தொடர்பில் அறிவினையும் புரிதலினையும் அதிகரிக்கு முகமாகவும் மேலும் பொதுமக்களுக்கான பொருத்தமான மனப்பாங்கு சார்ந்த மாற்றங்களை உருவாக்குமுகமாகவும் மனித உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல். இதில் அரசாங்க உத்தியோகத்தர்கள், (பாதுகாப்பு படையினருக்கும் பொலிஸாருக்கும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்) மற்றும் தனியார் துறையினைச் சேர்ந்த தொழில் வழங்குநர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள் போன்றோர் உள்ளடக்கப்படுவர் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | | | | பிராந்திய ரீதியில் நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கியமை | | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை | | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் சுருக்கமான விபரம் | | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் | | |
| | | | | 1.2.b | கொள்கை வகுப்போருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கும், அரச உத்தியோகத்தர்களுக்கும் மத்தியில் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை விருத்தி செய்வதற்கான தேவை | கொள்கை வகுப்போருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் மனித உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | பிரச்சினைகள் | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரப்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிராந்திய ரீதியில் நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கியமை | | |
| | | | | | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை | | |
| | | | | | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் சுருக்கமான விபரம் | | |
| | | | | | இலக்கு வைக்கப்பட்ட நிறுவனங்கள் | | |
| | | | | மனித உரிமைகளுடன் தொடர்புடைய நிகழ்ச்சிகளை சிரேஸ்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி மொடியுள்களில் உள்ளடக்குதல் | மொடியுள்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | +3 மாதங்கள் | சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் |
| | | | | பொலிஸ் திணைக்களம் மற்றும் முப்படைகளின் பாடத்திட்டத்தினை மீளாய்வு செய்தல். தேவையான இடத்தில் மனித உரிமை தொடர்பாக விழிப்புணர்வினை உருவாக்கும் நோக்கத்தில் நடத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை அதிகரித்தல் மற்றும் மனித உரிமை தொடர்பாக மனப்பாங்கு சார்ந்த மாற்றத்தினை உருவாக்குதல் | பாடத்திட்டம் மீளாய்வு செய்யப்பட்டது | +3 மாதங்கள் | பாதுகாப்பு அமைச்சு |
| | | | | | பாடத்திட்டம் திருத்தப்பட்டது | | |
| | | | | நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்திறனை தீர்மானிக்கும் நோக்கத்துடன் அவ்வாறான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மேம்பாட்டிற்காக பரிந்துரைகளை வழங்கும் நோக்கத்துடன் நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்து கண்காணித்தல். | கண்காணிப்பு பொறிமுறை நிறுவப்பட்டது | +3 மாதங்கள் | சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் |
| | | | | | முன்னேற்றத்துக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் கிரமமான கண்காணிப்பும் பரிந்துரைகளும் மேற்கொள்ளப்பட்டன | நடைபெற்று வருகின்றது | |
| | | | | | பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டன. | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1.3 | அரசியல் அமைப்பின் மூன்றாம் அத்தியாயத்துடன் செயற்திறன்மிகு முறையிலும் பூரணமாகவும் இயைபுறுதல் அத்துடன் சட்ட உருவாக்கச் செயன்முறையில் வெளிப்படைத்தன்மை | 1.3.a | அரசியல் அமைப்பின் மூன்றாம் அத்தியாயத்துடன் உத்தேச சட்டவாக்கம் இயைபுறுகின்றதா என்பதைப் பரிசீலிப்பதற்கு போதிய நேரம் இல்லாமை | பாராளுமன்றத்தின் சகல சட்டமூலங்களையும் பாராளுமன்ற இணையத்தளத்திலே சேர்த்து பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கான ஒரு பொறிமுறையினை வழங்கும் வகையில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினைத் தேவைப்படுத்துவதற்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல் | பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் திருத்தப்பட்டன | + 1 வருடம் | பாராளுமன்றம் |
| | | | | | | | இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட சட்டமூலங்களின் எண்ணிக்கை | நடைபெற்று வருகிறது | |
| | | | | | | | பொதுமக்களின் கருத்துக்களுக்கான பொறிமுறை அமுலில் உள்ளது | + 1 வருடம் | |
| | | | | | | சட்டமூலமொன்றிற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கு வழங்கப்பட்டுள்ள கால அளவினை நீடிப்பது பற்றி ஆராய்தல். | அரசியமைப்புத் திருத்தச் சட்டமூலம் | + 1 வருடம் | சனாதிபதி செயலகம் |
| | | | | | | அவசர சட்டமூலம் தவிர்ந்த ஏனைய உத்தேச வரைபுச் சட்டமூலம் மற்றும் உத்தேச சட்டமூலம் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.. | பிராந்தியரீதியில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது. | முன்னெடுக்கும் அமைச்சு |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை | | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் சுருக்கமான விபரம் | | |
| | | 1.4 | பங்கேற்புமிகு முறையிலான சனநாயகத்தினை உறுதிப்படுத்துதல் | 1.4.a | தேசிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதில் சிவில் சமூகத்துடனும் பாதிப்புறு நிலையிலுள்ள குழுக்களுடனும் சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்களுடனும் போதிய ஆலோசிப்பு இல்லாமையும் அவர்களின் பங்குபற்றுதல் இல்லாமையும். | தேசிய சட்டங்களையும் கொள்கைகளையும் வகுக்கையில் சிவில் சமூகத்துடனும் பாதிப்புறுநிலையில் உள்ள குழுக்களுடனும் சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்களுடனும் அரசாங்க முகவர்கள் ஆலோசிப்பு நடத்துவதை தேவைப்படுத்துவதற்கு ஒரு நியமமான செயல்விதியினை நிறுவுதல். | நியமமான செயல்விதிகள் உருவாக்கப்பட்டுள்ளது | + 6 மாதங்கள் | சட்டமூலத்தினை சமர்ப்பித்தலை முன்னெடுக்கும் அமைச்சு |
| 2. | அரசியலமைப்பு உரிமை | 2.1 | சட்ட ஆட்சி | 2.1.a | 1978ம் ஆண்டின் அரசியலமைப்பு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டபோது இருந்த சில குறிப்பிட்ட சட்டங்களின் அரசியலமைப்பு ரீதியான செல்லுபடியாகும் தன்மை | சம்பந்தப்பட்ட சட்டங்களை மீள ஆராய்தல் | மீள ஆராய்தல் நடைபெறுகின்றது | +2 வருடங்கள் | சம்பந்தப்பட்ட லைன் அமைச்சு |
| | | | | | | மீளாய்விண்டிப்படையில் சட்டத்தினைத் திருத்துதல். | சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன | +4 வருடங்கள் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3. | மனித உரிமை மீறல்களுக்காக பரிகாரங்களை வழங்குவதில் வகைப்பொறுப்பு | 3.1 | நீதியினை உறுதிப்படுத்துவதற்கான வகைப்பொறுப்பும் வெளிப்படைத் தன்மையும் | 3.1.a | அடிப்படை உரிமை வழக்குகளில் அரச பிரதிநிதித்துவத்தினை அணுகக்கூடியதாக இருத்தல் | சட்டமா அதிபர் வழிகாட்டல்களை உருவாக்குதல். | வழிகாட்டல்கள் உருவாக்கப்பட்டு அறிவிக்கப்பட்டன | + 6 மாதம் | சட்டமா அதிபர் திணைக்களம் |
| | | 3.2 | தனிப்பட்ட கட்டுப்பாட்டினை கருத்தில் கொண்டு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் செயல்திறன்மிகுந்த அமுல்படுத்தல் | 3.2.a | சிறைச்சாலைகள், சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் போன்ற அரச நிறுவனங்களில் உள்ள நபர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படும் போது தனிப்பட்ட பொறுப்பு பற்றி போதியளவிற்கு ஆராயாமை. | பல்வேறு வகையான நபர்களினைப் பராமரிப்பதை ஒழுங்குபடுத்துகின்ற சம்பந்தப்பட்ட சட்டவாக்கங்களை மீளாய்வு செய்தல் | மீளாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது மற்றும் தேவையான மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன | 1 வருடம் | சம்பந்தப்பட்ட லைன் அமைச்சு |
| | | | | | | தனிப்பட்ட பொறுப்புக்களின் விளைவுகளான துஷ்பிரயோகம் / புறக்கணிப்பு / பாகுபாடு ஆகியவை பற்றிய முறைப்பாடுகளை கண்காணிக்கும் சந்தர்ப்பங்கள் | கண்காணிப்பு பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது | நடைபெற்று வருகின்றது. | |
| 4. | மனித உரிமை மீறல்களுக்கான பரிகாரங்களுக்கான உரிமையினை உறுதிப்படுத்துகின்ற செயற்திறன்மிகு நீதி நிர்வாக அல்லது சட்டவாக்க அதிகார அமைப்புக்கள் | 4.1 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்திறன்மிகு செயற்பாட்டிற்காக அதனை வலுப்படுத்தல் | 4.1.a | மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆற்றலினை வலுப்படுத்துவதற்கான தேவை | அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தில் உள்ளடங்கியுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் ICCPR சட்டம் உள்ளடங்கிய தேசிய சட்டங்களின் கீழ் நியாயப்படுத்தப்படக் கூடிய மனித உரிமைகள் தொடர்பாக ஆணைக்குழு செயற்படுவதற்கு அதனை வலுவூட்டுவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தினை திருத்துதல் | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம் திருத்தப்பட்டது | + 1 வருடம் | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | | | ஒவ்வொரு வருடத்தின் முதற் காலாண்டினுள்ளும் வெளியிடுவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தினை திருத்துதல். அத்துடன் அதனை மனித உரிமைகள் ஆணைக்குழு இணையத்தளத்திலும் பின்வருமாறு காட்சிப்படுத்த முடியும்.:<br><br>அ) முன்னைய வருடத்திலே இலங்கையில் மனித உரிமைகளின் நிலை பற்றிய ஆவணப்படுத்தல்<br><br>ஆ) அதன் கடமைகளை நிறைவேற்றும் வடிவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்<br><br>இ) ஆய்வின் மூலம் கண்டறிந்தவைகள் | சட்டவாக்கம் திருத்தப்பட்டது | + 1 வருடம் | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | | | | வருடாந்த அறிக்கை வெளியிடப்பட்டது (அறிக்கை வெளியிடப்பட்ட மாதம்) | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரைப்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 4.1.b | பிராந்திய அலுவலகங்கள் உள்ளிட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு போதியளவு திறன்மிகு பணியாளர்கள் இல்லாமை | பதவிநிலை விஸ்தரிப்பிற்கான தேவையினை மதிப்பிடலும் தேவையேற்படின் அதனை விஸ்தரித்தலும் | மதிப்பிடல் மேற்கொள்ளப்பட்டது மேலும் பதவி நிலை விஸ்தரிக்கப்பட்டது | +6 மாதங்கள் | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு |
| | | | | | | இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பணியாளர்களின் கல்வி மற்றும் பயிற்சியினை மேம்படுத்தல் குறிப்பாக குற்றவியல் விசாரணைகளை நடாத்துவதில் அவர்களின் திறனை அதிகரித்தல். | பயிற்சி நடத்தப்பட்டது | தற்போது நடைபெற்று வருகிறது | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | | | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களை அமைப்பதற்கு நிரந்தர அமைவிடங்களை வழங்குதல். | நிரந்தர அலுவலகங்கள் வழங்கப்பட்டன | +1 வருடம் | |
| | | | | | | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட/ விசாரணைப் பிரிவுகளில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பணியாற்றுவதற்காக அவர்களுக்கு மாற்றுப் பதவி அமர்த்துகையினை வழங்குதல் | சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து மாற்றுப் பதவி அமர்த்துகை பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | தற்போது நடைபெற்று வருவது | சட்டமா அதிபர் திணைக்களம் |
| | | | | 4.1.c | இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்கு போதியளவு அமுல்படுத்தும் தன்மையும் வினைத்திறனும் இல்லாமை | அடிப்படை உரிமையினை மீறியதன் காரணமாக எழுகின்ற குற்றத்தினை இழைத்ததற்குப் பொறுப்பான நபர்களுக்கு எதிராக குற்றவியல் நடைமுறையினை மேற்கொள்வதற்காக மனித உரிமை ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற விசாரணைக் குறிப்புக்களை கருத்தில் கொள்வதற்கு சட்டமாஅதிபரை வலுவூட்டுவதற்காக குற்றவியல் நடைமுறைக் கோவைச் சட்டத்தினைத் திருத்துதல் | குற்றவியல் நடைமுறைக் கோவைச் சட்டம் திருத்தப்பட்டது | +1 வருடம் | நீதி அமைச்சு |
| | | | | | | | மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைக் குறிப்புக்களைப் பயன்படுத்திய வழக்குகளின் எண்ணிக்கை | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | | | ஆணைக்குழுவின் பரிந்துரையானது தகுந்த காரணங்களில்லாமல் அமுல்படுத்தப்படாமலிருக்கும் பொழுது பாதிப்புக்குள்ளான தரப்பினரின் சார்பில் மாகாண மேல் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுவினை சமர்ப்பித்து வழக்குத் தொடர்வதற்காக அதனை இயலுமாக்குவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தினை திருத்துதல் | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டம் திருத்தப்பட்டது | +1 வருடம் | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | | | | சட்டமா அதிபரினால் மாகாண உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாரதூரமான மனித உரிமை மீறல்கள் (சித்திரவதை, நீதிக்குப் புறம்பான மரண தண்டனை, காணாமல் போதல், தன்னிச்சையான தடுத்து வைத்தல்) நிகழ்த்தப்பட்டு அந்த முறைப்பாடுகள் தகுதிவாய்ந்த வழமையான அதிகார அமைப்பிற்கு மேற்கொள்ளப்பட்டு அது பக்கச்சார்பற்ற உரிய பூரணமான விசாரணையினைத் தகுந்த காரணங்களின்றி நடத்துவதிலிருந்தும் தவிர்ந்துள்ளது என பிராந்திய நியாயாதிக்கமுடைய நீதவான் முன்னிலையில் அது நிருபிக்கப்படும் பட்சத்தில் அது தொடர்பில் நீதவான்கள் விசாரணைசார் நியாயாதிக்கத்தினை மேற்கொள்வதற்காக அவர்களை வலுவூட்டுவதற்கு குற்றவியல் செயல்விதிச் சட்டக் கோவையினை திருத்துதல் | குற்றவியல் செயல்விதிக் கோவை திருத்தப்பட்டது | +1 வருடம் | நீதி அமைச்சு |
| | | | | | | | விசாரணகளை நீதவான் நடத்துகின்ற வழக்குகளின் எண்ணிக்கை | தற்பொழுது நடைபெற்று வருபவை | சட்டமா அதிபர் திணைக்களம் |
| | | | | 4.1.d | மிகவும் முக்கியமான விடயங்களில் கவனம் செலுத்துவதில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சார்பளவில் சிறிய முறைப்பாடுகளில் HRCSL இன் நேரத்தினதும் வளங்களினதும் விகிதாசாரமற்ற அளவு தற்போது செலவிடப்படுதல் | தெரிவு செய்யப்பட்ட வழக்குகளை ஏனைய பொருத்தமான பொறிமுறைகளுக்கு ஆற்றுப்படுத்துதல் | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழக்குகளைப் பூர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்ட நேரத்தில் ஏற்பட்ட குறைப்பு (%) | வருடாந்தம் அளவிடப்படு பவை | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | | | | ஏனைய பொறிமுறைகளுக்கு ஆற்றுப்படுத்திய வழக்குகளின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது. | |
| | | | | 4.1.e | HRCSL இற்கும் சிவில் சமூகத்திற்கும் இடையில் போதிய இடையீடு இல்லாமை. | ஒத்துழைப்பிற்கான பொறிமுறையினை சிவில் சமூகத்துடன் நிறுவுதல் | பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது | +3 மாதங்கள் | |
| | | | | 4.1.f | HRCSL இற்கும் அரசாங்க முகவர்களுக்கும் ஏனைய ஆணைக்குழுக்களுக்குமிடையில் போதிய ஒருங்கிணைப்பு இல்லாமை | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் அரசாங்க முகவர்களுக்கும் ஏனைய ஆணைக்குழுக்களுக்குமிடையில் ஒத்துழைப்பு பொறிமுறைகளை நிறுவுதல் | ஒருங்கிணைப்பு பொறிமுறை நிறுவப்பட்டது | +3 மாதங்கள் | |
| | | | | | | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் HRCSL இனதும் ஏனைய சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்களினதும் ஆலோசிப்புடன் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு விரைவான பதிற்செயற்பாட்டிற்காக சிறந்த நடைமுறைக்கான வழிகாட்டல்களை உருவாக்குதல் | வழிகாட்டல்கள் உருவாக்கப்பட்டன | +3 மாதங்கள் | |
| | | | | | | உருவாக்கப்பட்ட நடைமுறைக்கான வழிகாட்டல்கள் தொடர்பாக தவணை முறையில் சுயாதீனமான மீளாய்வுகளை நடாத்துதல் | மீளாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரப்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பதவி உயர்வுகளை வழங்குவதற்கு முன்னால் HRCSL இன் பரிந்துரைகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு PSC க்கும் HRCSL இற்கும் இடையில் ஒரு உசாவல் பொறிமுறையினை நிறுவுதல் | உசாவல் பொறிமுறை நிறுவப்பட்டுள்ளது | + 3 மாதங்கள் | |
| | | | | 4.1.g | முறைப்பாடுகள் கிடைக்கும் போது அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக HRCSL இன் பிராந்திய அலுவலகங்களின் சுயாதீனத்தையும் வலுவினையும் அதிகரிப்பதற்கான தேவை | HRCSL இன் பிராந்திய அலுவலகங்களுக்கு உதவும் முகமாக சிவில் சமூக உறுப்பினர்களைக் கொண்ட பிராந்திய ஆலோசனை வழங்கல் குழுக்களை நிறுவுதல் | பிராந்திய மதியுரைக்குழு நிறுவப்பட்டது | + 1 வருடம் | |
| 5 | அவசரகால ஒழுங்கு விதிகள், அவசரகாலச் சட்டம் | 5.1 | பொது அவசர நிலையின் போது சர்வதேச சட்டங்களின் கீழான கடப்பாடுகளில் இருந்து விலகியிருத்தல். வன்மையாக கோரப்படும் நிலைமையின் தேவை மற்றும் சாதி, நிறம், பால், மொழி, சமயம் அல்லது சமூக பின்னணி போன்றன சார்பாக பாரபட்சம் காட்டாமை சார்பாக மட்டும் | 5.1.a | இலங்கையின் மீது கடப்பாடாக இருக்கின்ற சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமை விழுமியங்கள் மற்றும் நியமங்களின் அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சில ஏற்பாடுகளை மீளாய்வு செய்தல் | சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமை விழுமியங்களுடன் பொருந்தாத் தன்மையினை அடையாளம் காண்பதற்காக பயங்கரவாத தடைச் சட்டத்தினை மீளாய்வு செய்து இந்த ஒழுங்கு விதியின் தொடர்ச்சியான பிரயோகத்திற்கான தேவையினை மதிப்பீடு செய்தல் | மீளாய்வு நடத்தப்பட்டது | + 1 வருடம் | நீதி அமைச்சு |
| | | | | | | இதற்கமைய சட்டத்தினைத் திருத்துதல். | சட்டம் திருத்தப்பட்டது | + 1 வருடம் | |
| 6 | கடமைகளிலிருந்து விலகுதல் தொடர்பான மரபொழுங்குகள் | 6.1 | ICCPR இன் 4.3 ஆம் இணங்குதல் தொடர்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஒரு பகுதியில் ஏற்படக்கூடிய பின்னடைவு அல்லது தோல்வி | 6.1.a | ICCPR யின் உறுப்புரை 4.3 உடன் வெளிவிவகார அமைச்சு இயைபுறத் தவறும் சாத்தியம் | பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துதல் மற்றும் திருத்துதல் தொடர்பான செய்தியினை உறுப்புரை 4.3 இனால் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் குழுவிற்கு வெளிவிவகார அமைச்சு முறைசார் தொடர்பாடல் மூலம் சமர்ப்பிப்பதற்கு அதனை இயலுமாக்குவதற்காக சனாதிபதியின் செயலாளர் அவ்விடயத்தினை தெரியப்படுத்துவதற்கு அவரைக் கடப்படுத்துவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தினை திருத்துதல் | பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது | + 1 வருடம் | பாதுகாப்பு அமைச்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | வாழ்க்கைக்கான உரிமை | 7.1 | வாழ்க்கைக்கான உரிமையினை உறுதிப்படுத்தலும் பாதுகாத்தலும் | 7.1.a | சந்தேகத்தின் பேரிலான கைதிகளின் பாதுகாப்பு | பின்வருவனவற்றிற்காக ஏற்பாடுகளை நீதவான்களுக்கு வழங்குவதற்காக குற்றவியல் நடைமுறைக் கோவையின் 30 ஆம் அத்தியாயத்தினை திருத்துதல்:<br>1) பொலிஸாரினால் அல்லது ஆயுதப்படையினால் நிகழ்த்தியதாக கூறப்படும் அனைத்து மரணங்களையும் விசாரிப்பதற்காக விசாரணைகளை நடத்தல்<br>2) தேவையான குற்றவியல் மற்றும் தடயவியல் விசாரணைகளை நடத்துவதற்கு பணிப்புரைகளை விடுத்தலும் அவற்றினை கண்காணித்தலும்<br>3) மரணத்திற்கான தெளிவான காரணம் (பொதுவாக தீர்ப்பு எனக் குறிப்பிடப்படுவது) அறிவிக்கப்பட்டதன் பின்பும் கூட மரணம் பற்றிய விசாரணையினைத் தொடருதல் | அத்தியாயம் 30 திருத்தப்பட்டுள்ளது. | + 1 வருடம் | நீதி அமைச்சு |
| | | | | | | | பொலிசாரினால் அல்லது ஆயுதப்படையினரால் நடத்தப்பட்டதாக கூறப்படும் மரணங்கள் தொடர்பாக நீதவான்கள் நடத்திய விசாரணைகளின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது. | |
| | | | | | | | தேவையான குற்றவியல் மற்றும் தடையவியல் விசாரணகளை நீதவான் நடத்துகின்ற வழக்குகளின் எண்ணிக்கை | | |
| | | | | | | | தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்பும் விசாரணை தொடருகின்ற வழக்குகளின் எண்ணிக்கை | | |
| | | | | | | மேலே குறிப்பிடப்பட்டுள்ள மரணங்களின் வகைகள் பற்றி பக்கச்சார்பின்றிய பூரணமான நீதி விசாரணை / விசாரணையினை நடத்துவது பற்றி நீதவான்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது | நீதிச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் நீதவான்களுக்கான நிலையம் |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட சட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை | | |
| | | | | | | | நிகழ்ச்சித்திட்டங்களின் பிராந்திய ரீதியிலான விநியோகம் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நீதிமுறைப்படுத்தக்கூடிய கொலை என சம்பந்தப்பட்ட விசாரணையினை நடாத்தும் நீதவானினாலும் சட்டமா அதிபரினாலும் வகைப்படுத்தப்பட்ட மரணங்கள் தவிர்ந்த கீழ்நிலை அதிகாரிகள் மற்றும் ஆளணியினரின் காவலில் உள்ளோரின் மரணங்கள் தொடர்பாக பொலிஸ் நிலையங்கள் மற்றும் அதேபோன்ற இராணுவ நிறுவனக் குழுக்களுக்கு பொறுப்பாக இருப்போருக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு இட்டுச் செல்லும் கடும் பதிலாட் பொறுப்புக்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காக பொலிஸ் கட்டளைகளையும் இராணுவப் பணிப்புரைகளையும் திருத்துதல் | பொலிஸ் கட்டளைகளும் இராணுவப் பணிப்புரைகளும் திருத்தப்பட்டன | + 1 வருடம் | பாதுகாப்பு அமைச்சு |
| | | | | 7.1.b | மனித உரிமை மீறல் நிகழ்வுகள் பொலிஸ் / பாதுகாப்புப் படைகளில் இணைந்துள்ள குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ அமைவிடம் / பொறுப்புடன் தொடர்புபடுவதுபோல் தென்படுதல் | அவ்வாறான இணைப்புகள் இருக்கின்றனவா என்பதை அடையாளம் காணும் நோக்கத்துடன் தளப்பரி சோதனைகள், தடமறிதல் மற்றும் பரிசோதனைகள் போன்ற கருவிகளை பயன்படுத்தி சமகாலத்தில் தொடர்ச்சியான ஆய்வுகளையும் பகுப்பாய்வுகளையும் மேற்கொள்ளல். அத்துடன் அவ்வாறு இணைப்புக்கள் இருப்பின் பொருத்தமான தடுப்பு, பரிகார, விசாரணை அத்துடன் அல்லது விசாரணைப் படிமுறை செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் | ஆய்வு மேற்கொள்ளப்பட்டது | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | | | | பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | | |
| | | | | 7.1.c | காணாமல் போதல் நிகழ்தல் | ஒருவரைக் கைது செய்யும்போது கைது செய்யப்படுபவரிடம் அல்லது அக்கைது செய்யப்பட்டவரின் மிக நெருங்கிய வயது வந்த குடும்ப உறுப்பினர் ஒருவரிடம் அக்கைதிற்கான காரணத்தினை தெரியப்படுத்துவதற்கு குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவை அவசரகால ஒழுங்குவிதிகள் மற்றும் பயங்கரவாதச் தடைச்சட்டம் ஆகியவற்றை தேவைப்படுத்துவதற்காக அவற்றைத் திருத்துதல். அவ்வாறான சந்தேக நபருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் பொழுது கைது செய்தமையை ஏற்றுக் கொண்டமைக்கான ஆவணங்களின் பிரதியானது சம்பந்தப்பட்ட நீதவான் நீதிமன்றத்தின் பதிவுகளில் கோப்பிலிடப்படல் வேண்டும் | குற்றவியல் நடைமுறைக் கோவை, மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆகியவை திருத்தப்பட்டுள்ளன | + 1 வருடம் | நீதி அமைச்சு |
| | | | | | | | சகல கைதுகளின் விழுக்காடாக விநியோகிக்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களின் எண்ணிக்கை | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | | நீதவான் நீதி மன்றத்தினால் கோப்பிலிடப்பட்ட பற்றுச் சீட்டுக்களின் எண்ணிக்கை (குற்றவியல் நடவடிக்கைகளின் விழுக்காடாக) | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காணாமல் போதலை நிகழ்செய்தல் தொடர்பாக ஒரு தன்னிலையான குற்றவியல் தவறினை உருவாக்குவதற்காக குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையினை திருத்துதல் | தண்டனைக் கோவை திருத்தப்பட்டது | +1 வருடம் | |
| | | | | | | | காணாமல் போதல் தொடர்பான குற்றச் செயல்களுக்காக தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | | காணாமல் போதல் தொடர்பான குற்றச்செயல்களுக்காக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை | | |
| | | | | | | ஆட்கள் தன்னிச்சையின்றி காணாமல் போதல், கடத்தப்படுதல் அல்லது கீழ்நிலை உத்தியோகத்தரினால் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்படுதல் தொடர்பாக பொலிஸ் நிலையங்கள் மற்றும் அதேபோன்ற இராணுவ நிறுவனக் குழுக்கள் ஆகியவற்றுக்கு பொறுப்பாகவிருக்கும் அதிகாரிகளின் பதிலாற் பொறுப்புக்கு ஏற்பாடுகளை வழங்குவதற்காக பொலிஸ் கட்டளைகளையும் இராணுவப் பணிப்புரைகளையும் திருத்துதல் | பொலிஸ் கட்டளைகளும் இராணுவப் பணிப்புரைகளும் திருத்தப்பட்டன | +6 மாதங்கள் | பாதுகாப்பு அமைச்சு |
| | | | | | | | கீழ் நிலை உத்தியோகத்தர்களின் குற்றச் செயல்களுக்காக சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் குற்றம் சாட்டப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (பதிலாற் பொறுப்பு) | தற்பொழுது நடைபெற்று வருபவை வருடாந்த அடிப்படையில் அளவிடப்பட்டது | |
| | | | | 7.1d | சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டோரினை பாதுகாப்பதற்கு எதிராக செயற்திறன் வாய்ந்த பாதுகாப்பு திட்டம் இல்லாமை | உயர் நீதிமன்றம், அமைச்சுக்களுக்கு இடையிலான குழு மற்றும் நீதி சட்ட மறுசீராக்கல் பற்றிய பாராளுமன்ற ஆலோசனைக் குழு ஆகியவற்றினால் முன்மொழியப்பட்ட திருத்தங்களை ஒருங்கிணைத்து சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டோருக்கு உதவுதல் மற்றும் பாதுகாத்தல் சட்ட மூலத்தினை இயற்றுதலை துரிதப்படுத்துதல் | சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டோரைப் பாதுகாத்தல் மற்றும் உதவுதல் சட்டம் இயற்றப்பட்டது. | +6 மாதங்கள் | நீதி அமைச்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8. | கைதும் தடுத்து வைப்பும் | 8.1 | ஒவ்வொருவரும் சுதந்திரத்தினையும் மற்றும் ஆட்களுக்கான பாதுகாப்பிற்கான உரிமையினையும் கொண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்துதல், யாருமே தன்னிச்சையான கைதுக்கோ தடுத்து வைப்பிற்கோ உட்படமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்தல். சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள காரணங்கள் மற்றும் செயல்விதிகள் தவிர்ந்த வேறு காரணங்களுக்காக யாரினதும் சுதந்திரமானது பறிக்கப்படமாட்டாது என்பதை உறுதிப்படுத்தல். | 8.1.a | கைதுசெய்யப்பட்ட சகல நபர்களும் 24 மணித்தியாலங்களினுள் ஒரு நீதவானின் முன்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதைத் தேவைப்படுத்துகின்ற விதிகளுக்கு இறுக்கமாகக் கட்டுப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான தேவை | பின்வருவனவற்றிற்காக நிர்வாகச் செயல்விதிகளை மேம்படுத்த தற்போது உள்ள வசதிகளைத் திருத்துதல்:<br>1) கைது செய்யப்பட்ட இடங்களுக்கு விஜயங்களை மேற்கொள்வதற்காக நீதவான்கள் மற்றும் ஏனைய சட்ட அமுலாக்கல் முகவர்களை வலுப்படுத்துதல் | விதிகள் திருத்தப்பட்டன | +6 மாதங்கள் | நீதி அமைச்சு |
| | | | | | | 2) சகல கைதுகளையும் 28(1) இன் கீழ் உள்ளடக்குவதற்காக அவர்களுக்கு அதிகாரத்தை வழங்குவதற்கு HRC யினைத் திருத்துதல். அத்துடன் கைதுகளை பிரதேசத்தின் அரச சட்டத்தரணிக்கு தெரிவிப்பதற்காக தேவைப்படுத்துதல். | இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சட்டம் திருத்தப்பட்டது | +6 மாதங்கள் | |
| | | | | | | அவ்வாறான தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தில் இடம்பெறக்கூடிய ஏதாவது சட்டத்திற்கு புறம்பான அல்லது சட்டவிரோதமான செயற்பாடுகளை உரிய முறையில் ஆவணப்படுத்தி அறிக்கையிடுவதற்காக அவ்வாறான விசாரணைகளை மேற்கொள்ளும் நீதவான்கள் பின்பற்றுவதற்காக சுற்று நிருப வடிவில் மரபொழுங்கினை தயாரித்து அமுல்படுத்துதல். | சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன | +6 மாதங்கள் | நீதிச் சேவை ஆணைக்குழு |
| | | | | | | | காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை | காலாண்டு அடிப்படையில் தற்போது நடப்பது | |
| | | | | | | | அறிவிக்கப்படாமல் விஜயங்களை மேற்கொள்ளும் நீதவான்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் வழங்கும் அறிக்கைகளின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது. | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 8.1.b | கைது செய்யப்பட்டவர்கள் அவர்கள் கைதுசெய்யப்பட்ட பின்னர் உடனடியாக வழக்கறிஞர் ஒருவரைக் கொண்டிருப்பதற்கான உரிமை அற்றவர்களாக இருக்கின்றனர் | கைது செய்யப்பட்ட சகல நபர்களும் தமது தெரிவுக்குரிய சட்டத்தரணியினை கலந்துரையாடி ஆலோசனை பெறுவதற்காக உள்ள உரிமையினை அவர்களுக்கு வழங்குவதற்கு அல்லது அவ்வாறான ஒரு சட்டத்தரணியினை பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் இயலாமல் இருப்பதாகக் குறிப்பிடும் பொழுது தேசிய ரீதியாக அமுல்படுத்தப்படும் கடமைச் சட்டத்தரணி திட்டத்தின் கீழ் சுயாதீனமான ஒரு சட்டத்தரணியின் சேவையினை அவர் நீதவானின் முன்பு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னால் பெற்றுக் கொள்வதற்கான அவரின் உரிமையை பெற்றுக் கொடுப்பதற்காக குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவைச் சட்டத்தினை திருத்துதல். இவ்வாறான உரித்தானது அவ்வாறான சந்தேக நபரின் வாக்கு மூலத்தினை பதிவு செய்ததன் பின்னரே வழங்கப்படலாம் என்பது தெளிவிற்காக இங்கே குறிப்பிடப்படுகின்றது | குற்றவியல் நடைமுறைக் கோவை திருத்தப்பட்டது | 1 வருடம் | நீதி அமைச்சு |
| | | | | | | | தமது தெரிவிற்குரிய சட்டத்தரணியை அணுகக்கூடிய சந்தேக நபர்களின் எண்ணிக்கை மற்றும் விழுக்காடு | தற்பொழுது நடைபெற்று வருபவை வருடாந்தம் அளவிடப்பட்டது | |
| | | | | | | | கடமைச் சட்டத்தரணி திட்டத்தின் மூலமாக சட்டத்தரணி ஒருவரை அணுகக்கூடிய சந்தேக நபர்களின் எண்ணிக்கையும் விழுக்காடும் | | |
| | | | | 8.1.c | கைது மற்றும் தடுத்து வைப்பின் போதும் அதனைத் தொடர்ந்தும் போதியளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமை | கைது மற்றும் தடுத்து வைப்பின் போதும் மற்றும் அதனைத் தொடர்ந்தும் தேவையான பாதுகாப்பினை வழங்குவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல் | வழிகாட்டல்கள் விநியோகிக்கப்பட்டன | + 3 மாதங்கள் | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | | | தற்பொழுது இருக்கின்ற சகல பொலிஸ் கட்டளைகளையும் சுற்று நிருபங்களையும் மீளாய்வு செய்தல் | பொலிஸ் கட்டளைகளும் சுற்று நிருபங்களும் மீளாய்வு செய்யப்பட்டன | + 6 மாதங்கள் | பொலிஸ் திணைக்களம் |
| | | | | | | மீளாய்வின் அடிப்படையில் பொலிஸ் கட்டளைகளையும் சுற்று நிருபங்களையும் திருத்துதல் | பொலிஸ் கட்டளைகளும் சுற்று நிருபங்களும் திருத்தப்பட்டன | + 1 வருடம் | |
| | | | | | | | மீளாய்வு செய்யப்பட்ட கட்டளைகளும் சுற்று நிருபங்களும் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டன | | |
| | | | | | | | மீளாய்வு செய்யப்பட்ட கட்டளைகளும் சுற்று நிருபங்களும் பொலிஸ் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரப்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மேலே குறித்துரைக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் தொடர்பாக சட்ட உத்தியோகத்தர்களுக்கும் சட்டத்தரணிகளுக்கும் மனித உரிமை ஆணைக்குழு பணியாளர்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது | 1) நீதிச் சேவை ஆணைக்குழு<br>2) சட்டமா அதிபர் திணைக்களம்<br>3) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு<br>4) இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை | | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்டோரின் சுருக்கமான விபரம் | | |
| 9. | தடுத்து வைப்பின் நிலை | 9.1 | தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மனிதாபிமானத்துடன் நடத்தப்படுகின்றனர் என்பதையும் அவர்களின் மனித கௌரவத்திற்கு மதிப்பளிக்கப்படுகின்றது என்பதையும் உறுதிப்படுத்தல் | 9.1.a | குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் மற்றும் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்ட குற்றவாளிகளையும் வெவ்வேறாக வைத்தலிலான குறைபாடு | தடுப்புக்காவலில் வெவ்வேறாக வைக்கப்பட்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு சிறைச்சாலை ஒழுங்குவிதிகளை திருத்துதல் | சிறைச்சாலை ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டன | + 6 மாதங்கள் | நீதி அமைச்சு |
| | | | | | | | குற்றம் சாட்டப்பட்ட நபர்களும் குற்றத்தீர்ப்பு பெற்ற நபர்களும் ஒன்றாக வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் | தற்பொழுது நடைபெற்று வருபவை வருடாந்தம் அளக்கப்பட்டது | சிறைச்சாலைகள் திணைக்களம் |
| | | | | 9.1.b | தடுப்புக் காவல்களில் போதியளவு தரமின்மை காரணமாக சனநெரிசல் அதிகமாவதுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் உரிமை மீறப்படுதல் | சிறைச்சாலையின் வசதிகளை தரமுயர்த்துவதற்கு தேவையான மாற்றங்களை உறுதிப்படுத்துவதற்கு மீளாய்வினை நடத்துதல் | மீளாய்வு நடத்தப்பட்டது. | + 6 மாதங்கள் | சிறைச்சாலைகள் திணைக்களம் |
| | | | | | | மீளாய்வின் அடிப்படையில் தேவையான வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுதல் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டமை | + 1 வருடம் | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு |
| | | | | 9.1.c | தடுப்புக் காவல்களை மறுசீரமைப்பதற்கும் புனரமைப்பதற்குமான கவனக்குவிப்பு இல்லாமை | மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்புக்கான பொருத்தமான திட்டங்களை அமுல்படுத்துவதை உருவாக்கி மேற்பார்வை செய்தல் | திட்டங்கள் உருவாக்கப்பட்டன | + 6 மாதங்கள் | நீதி அமைச்சு |
| | | | | | | | திட்டங்களில் சம்பந்தப்பட்டுள்ள தடுத்துவைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது | |
| | | | | | | | திட்டங்களில் சம்பந்தப்பட்டுள்ள தடுத்துவைக்கப்பட்டவர்களின் விபரங்கள் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10. | அந்தரங்கத்திற்கான உரிமை | 10.1 | அந்தரங்கத்திற்கான உரிமையை உறுதிப்படுத்தல் | 10.1.a | அந்தரங்கத்திற்கான அரசியலமைப்பு ரீதியான சட்ட உரிமை இல்லாதிருத்தல் | அந்தரங்கத்திற்கான உரிமையானது உரிமைகள் பற்றிய வரைபுச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டு அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் | அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | +1 வருடம் | நீதி அமைச்சு |
| 11. | சமய சுதந்திரம் | 11.1 | சமய ஒற்றுமையினையும் தெரிவிற்கான சுதந்திரத்தினையும் மேம்படுத்துதல் | 11.1.a | பாடசாலைகளில் சமயக் கல்விக்கான கட்டுப்பாடுகள் | சமய சுதந்திரம் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நிர்வாக நடவடிக்கை | ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டுள்ளன / சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன | +3 மாதம் | கல்வி அமைச்சு |
| 12. | மொழி உரிமை | 12.1 | கலாசார மற்றும் மொழியுரிமைகளுக்கான உரிமையினை உறுதிப்படுத்தி பாதுகாத்தல் | 12.1.a | மொழி உரிமைகளுக்கான உரிமைகளை அதிகரிப்பதற்கான தேவை | மொழி உரிமைகளை செயற்திறனுடன் அமுல்படுத்துதல் | செயற்திறன்மிகு அமுல்படுத்துதல் | +1 வருடம் | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு |
| 13. | தகவலுக்கான உரிமை | 13.1 | தகவலுக்கான உரிமையினை உறுதிப்படுத்துதல் | 13.1.a | தகவலை அடைந்து கொள்வதை இயலுமாக்குகின்ற பரிமாணங்களை மேலும் அதிகரிப்பதற்கான தேவை | தகவல்களை பெறுதலுக்கான சட்டத்தினை ஏற்றுக்கொள்ளல் | சட்டவாக்கம் ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்டது | +1 வருடம் | நீதி அமைச்சு |
| 14. | கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம் | 14.1 | கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல் | 14.1.a | பொதுமக்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டத்தினையும் சுற்று நிருபங்களையும் தாபனக் கோவையினையும் மீளாய்வு செய்தல் | உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டத்தினையும் சுற்று நிருபங்களையும் தாபனக் கோவையினையும் மீளாய்வு செய்தல் | உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டம், தாபனக்கோவை மற்றும் நிருவாகச் சுற்றுநிருபங்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன | +6 மாதங்கள் | நீதி அமைச்சு |
| | | | | | | மீளாய்வின் அடிப்படையில் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன | பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன | +6 மாதங்கள் | |
| | | | | | | பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுதல் | பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டன | +1 வருடம் | |
| | | | | 14.1.b | உறுப்புரை 19ன் கீழ் இணையத்தினை அணுகுதலை ஆளுகை செய்கின்ற சட்டங்கள் இல்லாதிருத்தல | தேவையினை உறுதிப்படுத்துவதற்காக பல்துறை சார்ந்த குழு ஒன்றினை நியமித்தல். தேவையெனக் கருதப்படும் பட்சத்தில் இணையப்பயன்பாடு மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதை ஆளுகை செய்கின்ற சட்டவாக்கத்தினை வரைதல். | குழு நியமிக்கப்பட்டது | +1 வருடம் | தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவர் |
| | | | | | | இணையப் பாவனை மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளின் ஒழுங்குபடுத்துதலை ஆளுகை செய்கின்ற சட்டவாக்கத்தினை வரைதல். | சட்டவாக்கம் வரையப்பட்டது | +1 மாதம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | சட்டவாக்கம் இயற்றுதல் | சட்டவாக்கம் இயற்றப்பட்டது | + 1 வருடம் | |
| 15. | வாக்களிப்பதற்கும் பொது விவகாரங்களில் ஈடுபடுவதற்குமான உரிமை | 15.1 | வாக்களிப்பதற்கும் பொது விவகாரங்களில் ஈடுபடுவதற்குமான உரிமையினை உறுதிப்படுத்துதல் | 15.1.a | உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் வாக்குரிமை இழப்பு | உள்நாட்டில் இடம்பெயர்ந்த அவர்களது வாக்குரிமையினைப் பயன்படுத்துவற்கு அவர்களை இயலுமாக்குவதற்காக பொறிமுறையொன்றினை அடையாளப்படுத்துதல் | பொறிமுறை இனங்காணப்பட்டுள்ளது | + 6 மாதங்கள் | தேர்தல்கள் ஆணையாளர் |
| | | | | | | | பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது | + 6 மாதங்கள் | |
| | | | | | | | வாக்களிப்பதற்குப் பதிவு செய்யப்பட்டுள்ள வீடற்ற மக்களின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது. | |
| | | | | 15.1.b | தேர்தல்களின் உரிய சனநாயகச் செயன்முறையினையும் வெளிப்படைத் தன்மையினையும் பாதிக்கக்கூடிய காரணிகள் | ஜனாதிபதி, பொது, மாகாண மற்றும் உள்ளூராட்சி தேர்தல் சட்டங்களைத் திருத்தி அதனுடன் தொடர்புடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டத்தினையும் திருத்துதல். இதன்மூலமாக நியமன வேட்புமனுவினைத் தாக்கல் செய்வதற்கு ஒரு முன்நிபந்தனையாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனத்தினைச் சமர்ப்பித்தலை ஆக்குதல். மேலும் தவணைக் காலம் முடிவடைந்ததன் பின் மறுதேர்தலுக்கான முன்நிபந்தனையாக அவற்றினை மீண்டும் சமர்ப்பித்தல் | ஜனாதிபதி, பொது, மாகாண மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டங்கள் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனச் சட்டங்கள் திருத்தப்பட்டன | + 6 மாதங்கள் | நீதி அமைச்சு |
| | | | | | | வன்முறை மீறலுக்கான குற்றவியல் வலுவளிப்பு விண்ணப்பத்துடன் வருடாந்தச் சொத்துப் பிரகடனத்தையும் தேவைப்படுத்தும் வகையில் ஒழுங்கு விதிகளைத் திருத்துதல் | ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டன | | |
| | | | | 15.1.c | அங்கவீனமானோருக்கு வாக்களிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லாமை | அங்கவீனமான நபர்களுக்காக வாக்களிக்கும் இடங்களுக்குச் செல்வதற்கும் செயல் விதிகளையும் தகவல்களையும் பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பு வழங்கப்படுவதை நிருவாகச் செயற்பாடுகள் மூலம் உறுதிப்படுத்துதல் | நடவடிக்கைகள் அமுலில் உள்ளன | + 6 மாதங்கள் | தேர்தல்கள் ஆணையாளர் |
| | | | | | | | அங்கவீனமான மொத்த நபர்களின் விழுக்காடாக வாக்களிக்கும் அங்கவீனமானோரின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரைப்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 15.1.d | தற்காலிகமாக வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டு வாக்களிக்கும் உரிமையினைப் பயன்படுத்த விரும்புகின்ற இலங்கைப் பிரஜைகளுக்கு வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுதல் | புலம்பெயர் இலங்கையர்கள் வாக்களிப்பதை அனுமதிக்கின்ற பொருத்தமான பொறிமுறையினைப் பரிந்துரைப்பதற்காக குழுவினை நியமித்தல் | குழு நியமிக்கப்பட்டது | + 6 மாதங்கள் | |
| 16 | பாகுபாடு-பொதுவானது | 16.1 | சகல மக்களும் சட்டத்தின் முன்பு சமமானவர்கள் என்பதையும் அவர்கள் சாதி, நிறம், பால், மொழி, சமயம், அரசியல் அல்லது வேறு கருத்துக்கள், தேசிய அல்லது சமூக பூர்வீகம், சொத்து, பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாமல் சட்டத்தினால் சதா பாதுகாப்படுவதற்கான உரித்தினைக் கொண்டுள்ளதை உறுதிப்படுத்துதல் | 16.1.a | தனியார் துறையில் அர்ப்பணிப்புமிகு அதிகார அமைப்பு மூலமாக பாகுபாட்டுக்கு எதிரான பாதுகாப்பு இல்லாதிருத்தல் | வேலைத்தளத்தில் பாகுபாட்டின் காரணமாக எழுகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதற்கான செயல்விதிகளைத் தீர்மானிப்பதற்கு குழுவினை நியமித்தல். | குழு நியமிக்கப்பட்டது | + 6 மாதங்கள் | நீதி அமைச்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17. | பாகுபாடு அங்கவீனமானோர் | 17.1 | சகல மக்களும் சட்டத்தின் முன்பு சமமானவர்கள் என்பதையும் அவர்கள் சாதி, நிறம், பால், மொழி, சமயம், அரசியல் அல்லது வேறு கருத்துக்கள், தேசிய அல்லது சமூக பூர்வீகம், சொத்து, பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாமல் சட்டத்தினால் சதா பாதுகாப்படுவதற்கான உரித்தினைக் கொண்டுள்ளதை உறுதிப்படுத்துதல் | 17.1.a | மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு தேசிய உபாய மார்க்கங்களை வகுக்கையில் அங்கவீனமான மக்களின் நிலைமை மீது கவனம் செலுத்தாமை | அங்கவீனமானவர்களை பாதிப்புறு நிலையிலுள்ளவர்களாக உள்ளடக்க PRSPs னைத் திருத்துதல். | அங்கவீனமானவர்கள் ஊறுநிலையிலுள்ளவர்களாக 'RSP யில் உள்ளடக்கப்பட்டுள்ளனர் | + 6 மாதங்கள் | நிதி திட்டமிடல் அமைச்சு |
| | | | | 17.1.b | அங்கவீனமான நபர்களின் உரிமைகள் பற்றிய சமவாயத்தினை ஏற்று அமுல்படுத்தாமை | அங்கவீனமானோரின் உரிமைகள் பற்றிய தற்போதைய சட்டவாக்கமானது அங்கவீனமான நபர்களின் உரிமைகள் பற்றிய சமவாயத்துடன் இயைபுறுகின்றதா என்பதை மீளாய்வு செய்வதற்கு நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றினை நியமித்தல் | மீளாய்வு நடத்தப்பட்டது | + 1 வருடம் | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு |
| | | | | 17.1.c | அங்கவீனமான நபர்களின் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் தெரிவிற்குரிய மரபொழுங்கிலே இலங்கை ஒரு தரப்பல்ல | அங்கவீனமான நபர்களின் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் தெரிவிற்குரிய மரபொழுங்கினில் கைச்சாத்திடுதல் | தெரிவுக்குரிய மரபொழுங்கு கைச்சாத்திடப்பட்டது | + 1 வருடம் | வெளிவிவகார அமைச்சு |
| | | | | 17.1.d | அங்கவீனமான நபர்களின் உரிமைகள் பற்றிய சமவாயத்திற்கு செயலூக்கத்தினை வழங்குவதற்கு தேசிய சட்டவாக்கங்கள் போதியளவில் இல்லை | அங்கவீனமானோரின் உரிமைகள் பற்றிய தற்போதைய சட்டவாக்கமானது அங்கவீனமான நபர்களின் உரிமைகள் பற்றிய சமவாயத்துடன் இயைபுறுகின்றதா என்பதை மீளாய்வு செய்வதற்கு நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றினை நியமித்தல் | சட்டவாக்கம் திருத்தப்பட்டது / இயற்றப்பட்டது | + 3 மாதங்கள் | சமூக சேவைகள் அமைச்சு |
| | | | | | | | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | + 3 மாதங்கள் | |
| | | | | | | மீளாய்வின் அடிப்படையில் அங்கவீனமான நபர்களின் உரிமைகள் பற்றிய சமவாயத்திற்கு செயலூக்கம் வழங்குவதற்காக தற்பொழுது இருக்கின்ற சட்டவாக்கங்களை திருத்துதல் அத்துடன் அல்லது சட்டவாக்கங்களை இயற்றுதல் | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை | + 6 மாதங்கள் | |
| | | | | | | அங்கவீனமான நபர்களின் உரிமைகள், அங்கவீனமான நபர்களின் உரிமைகள் பற்றிய சமவாயம், அங்கவீனம் பற்றிய தேசிய சட்டவாக்கம் மற்றும் தேசிய கொள்கை ஆகியவை பற்றி அங்கவீனமான நபர்களுக்கும் பொது மக்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் விபரம் | நடைபெற்று வருகின்றது | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 17.1.e | அங்கவீனமான நபர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி பாதுகாத்து மேம்படுத்துவதற்கு போதியளவு பொறிமுறை இல்லாமை | சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்களுடன் மதியுரைக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு தற்போது இருக்கின்ற பொறிமுறைகளின் போதிய தன்மை பற்றிய ஆய்வொன்றை நடத்தி பரிந்துரைகளை மேற்கொள்ளல் | மதியுரைக் கலந்துரையாடலுக்கான பொறிமுறை | +1 வருடம் | |
| | | | | | | | அறிவுரை பெறப்பட்டவர்கள் | | |
| | | | | | | | ஆய்வு நடத்தப்பட்டது. | +6 மாதங்கள் | |
| | | | | | | | மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் | | |
| | | | | | | ஆய்வின் அடிப்படையில் பரிந்துரைகளை அமுல்படுத்துதல் | பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன | +2 வருடம் | |
| | | | | 17.1.f | அங்கவீனம் பற்றிய தேசிய கொள்கை போதியளவிற்கு அமுல்படுத்தப்படாமை | தேசிய கொள்கையில் பெயரிடப்பட்டுள்ள ஒவ்வொரு அரசாங்க முகவரினுள்ளும் அங்கவீனம் பற்றிய தேசிய கொள்கையினை அமுல்படுத்துவதற்கு துறைசார் செயற்றிட்டங்களை தயாரித்து அமுல்படுத்துதல். | துறைசார் செயற்றிட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன | +6மாதங்கள் | சமூக சேவைகள் அமைச்சு |
| | | | | | | | துறைசார் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன | நடைபெற்று வருகின்றது. | |
| 18. | நீதியினை அணுகுதல் | 18.1 | சிறைக்கைதிகளை நடத்துவதற்கான ஆகக்குறைந்த நியமங்களுடன் இயைபுறுதலை உறுதிப்படுத்துதல் | 18.1.a | சிறைச்சாலை நிலைமைகளில் குறைபாடுகள் காணப்படுதல். | பாதுகாப்பில் காணப்படும் குறைபாடுகளை அடையாளம் காண்பதற்காக குழு ஒன்றினை நிறுவுதல். மீளாய்வின் அடிப்படையில் குறைகளை நிவர்த்தி செய்ய பரிகார நடவடிக்கை எடுத்தல் | மீளாய்வு நடத்தப்பட்டது | ஒவ்வொரு 2 வருடங்களுக்கும் | சிறைச்சாலை மறுசீரமைப்பு புனரமைப்பு அமைச்சு |
| | | | | | | | அமுல்படுத்தப்பட்ட பரிந்துரைகள் | +4 வருடங்கள் | |
| | | | | | | சிறைச்சாலைக்கு உள்ளேயான இலத்திரனியல் தரவுத்தளம் ஒன்றினை நிறுவுதல். ஒவ்வொரு சிறைக்கைதியும் நீதியை அணுகக்கூடியதாக இருக்கின்றார் என்பதை உறுதிப்படுத்துவது தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய கண்காணிப்பு பொறிமுறை இதில் உள்ளடங்குகின்றது | வலையமைப்புத் தரவுத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது | +2 வருடங்கள் | |
| | | | | | | | அறிக்கைகளைக் கண்காணித்தல் | வருடாந்தம் | |
| | | | | | | உரிமை அடிப்படையிலான அணுகுமுறை பற்றி சிறைச்சாலைப் பணியாளர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | உரிமை அடிப்படையிலான அணுகுமுறை பற்றி சிறைச்சாலைப் பணியாளர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது | |
| | | | | | | | குற்றத்தை மீண்டும் இழைப்போரின் எண்ணிக்கை | | |
| | | | | | | கைதிகளுக்கான தொழில் பயிற்சி, ஆற்றுப்படுத்தல் மற்றும் சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சட்ட ஆலோசனை முகாம்கள் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது. | |
| | | | | | | | பங்குபற்றிய சிறைக் கைதிகளின் எண்ணிக்கை | | |
| | | | | | | மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தினை கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும் | மதிப்பீட்டு அறிக்கை | நடைபெற்று வருகின்றது | |
| | | | | 18.1.b | சிறைச்சாலைகளில் சனநெரிசல் நிறைந்து காணப்படுதல் | புதிய சிறைச்சாலைகளை நிர்மாணித்தல் | நிர்மாணிக்கப்பட்ட சிறைச்சாலைகளின் எண்ணிக்கை | 5 வருடங்கள் | |
| | | | | | | மாற்று தண்டனை வழங்குதல் தொடர்பாகவும் சமுதாய அடிப்படையிலான நல்வழிப்படுத்தல் சட்டத்தினை அமுல்படுத்தல் தொடர்பாகவும் நீதித்துறையும் சட்டத்தரணிகளும் விழிப்பூட்டப்பட்டனர் | விதிக்கப்பட்ட மாற்றுத் தண்டனைகளின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது. | |
| | | 18.2 | நீதியின் துரித நிர்வாகம் | 18.2.a | நீதியை வழங்குவதில் தாமதம் | நீதியினை மிகவும் வினைத்திறன் மற்றும் செயற்திறன்மிகு முறையில் நிர்வகிப்பதற்குத் தேவையான மறுசீரமைப்புக்களை அடையாளம் காணுதல். | மறுசீராக்கல்கள் அடையாளங்காணப்பட்டுள்ளன. | நடைபெற்று வருகின்றது | நீதி அமைச்சு |
| | | | | | | | பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன | | |
| | | | | | | துரிதமாக நீதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக மனித வளங்களையும் விநியோகங்களையும் உபகரணங்களையும் வழங்குதல் | உபகரணங்கள் மற்றும் விநியோகங்கள் உள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை | 3 வருடங்கள் | |
| | | | | | | | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்று குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்கு உரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஆற்றலினை அதிகரிப்பதற்காகவும் மனப்பாங்கு மாற்றத்தினை ஏற்படுத்துவதற்காகவும் நீதிமன்றப் பணியாளர்களுக்கும், பொலிசாருக்கும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது. | நீதி அமைச்சு |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்டவர்களின் விபரம் | | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | | |
| | | 18.3 | சட்ட உதவியும் பொருத்தமான ஏற்பாடுகளும் | 18.3.a | தேவையுடையோர் சட்டச் சேவைகளை அணுகுவதினை முன்னேற்றுவதற்கான தேவை | ஒவ்வொரு நீதித்துறை மாவட்டத்தில் சட்ட உதவி மையங்களை நிறுவுதல் | சட்ட உதவி மையங்களை நிறுவப்பட்டுள்ளன | நடைபெற்று வருகின்றது | நீதி அமைச்சு |
| | | 18.4 | அரச கரும மொழிகளுக்கான கொள்கையினை அமுல்படுத்துதல் | | பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளில் இலக்கு 7.1 இல் காணப்படும் தொனிப்பொருள்சார்ந்த பகுதியினை தயவுசெய்து பார்க்கவும். | | | | |
| | | 18.5 | நீதியினை அணுகுவதற்கும் சட்ட உதவியினை நாடுவதற்கும் முயற்சிப்போருக்கு உரிய கவனமும் நெறிசார் பதிலும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல் | 18.5.a | சில சட்டத்தரணிகளினால் அவர்களது கட்சிக்காரர்கள் சுரண்டப்படுதல் | சட்டத்தொழிலினால் நெறிசாரா முறையில் நடத்தப்படுகையில் முறைப்பாடு செய்வதற்கான பொறிமுறை பற்றிய விழிப்புணர்வினை அதிகரித்தல் | நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | + 1 வருடம் | நீதி அமைச்சு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்ததுடன் இணைந்து |
| | | | | | | முறைப்பாடுகள் செய்யப்படுமிடத்து பொருத்தமான நடவடிக்கைகள் | சட்டத் தொழிலில் உள்ளோருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டு அதில் பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | நடைபெற்று வருகின்றது | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள்

பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயத்திலே கைச்சாத்திட்டுள்ள ஒரு நாடு என்கின்ற ரீதியிலே இலங்கையானது (CESCR)அதன் சகல கொள்கை முன்னெடுப்புக்களிலும் இக்கொள்கைக்கு செயலூக்கம் வழங்கி வருவதுடன், அதன் அமுல்படுத்தலையும் உறுதிப்படுத்தி வருகின்றது, இதற்கமைய எதிர்காலத் தொலைநோக்கிற்காக மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் அரசாங்கக் கொள்கைச் சட்டகத்தினை அமுல்படுத்தி வருவதனால் இலங்கையானது சாதகமான சமூக பொருளாதார அபிவிருத்தியினை அடைந்துள்ளது.

முப்பது வருட காலம் நீடித்த நீண்ட மோதல் முடிவிற்கு வந்ததைத் தொடர்ந்து, பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான அரசாங்கத்தின் கடப்பாடுகள் உயர் முன்னுரிமை பெற்றதாக மாறியது. உயர் பொருளாதார வளர்ச்சியினை அடைவதற்கும் சமத்துவமின்மையினைக் குறைப்பதற்கும் ஓர் உறுதியான தளத்தினை உருவாக்கும் நோக்கத்துடன் செயன்முறை ஆரம்பமானது. பொருளாதார மற்றும் சமூகக் குறிகாட்டிகளில் இலங்கை கணிசமான முன்னேற்றத்தினை அடைவதனை இயலுமாக்குவதற்காக பெரிய அளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி முன்னெடுப்புக்களை அமுல்படுத்துவதையும் விவசாயம் மற்றும் உள்நாட்டுத் தொழில் முயற்சிகளுக்கு மீண்டும் உரமூட்டுவதையும் செயற்திறன் மிக்கதும் வினைத்திறன் மிக்கதுமான அரச சேவையினை வழங்குவதனையும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை வலுப்படுத்துவதனையும் தனியார் துறை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதனையும் கிராமிய அபிவிருத்தி முன்னெடுப்புக்களை அமுல்படுத்துவதனையும் மஹிந்த சிந்தனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் விளைவாக நாடு 2010 ம் ஆண்டிலே பொருளாதார வளர்ச்சியினைக் கண்டது. 2005 ஆம் ஆண்டில் US$ 1,241 ஆக இருந்த தலா நபர் வருமானத்தினை 2010 ஆம் ஆண்டில் US$ 2,399 ஆக உயர்த்தியது. 2005 ஆம் ஆண்டில் 15.2% ஆக இருந்த வறுமையயினை 2010 ஆம் ஆண்டில் 7.6% ஆகக் குறைத்தது. அத்துடன் 2010ம் ஆண்டிலே ஒட்டுமொத்த மனித அபிவிருத்திச் சுட்டியிலே 169 நாடுகளின் மத்தியில் 91 வது இடத்தினைப் பிடித்தது. இலங்கையின் அனைத்துப் பிரசைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வியையும் இலவச சுகாதார சேவையினையும் வழங்கியதன் காரணமாக வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு ஒப்பான சுகாதார மற்றும் சமூகக் குறிகாட்டிகளை அடைந்து கொண்டது. 2005 முதல் 2010 வரையான காலப்பகுதியில் மின்சாரத்தின் அணுகலை 75% லிருந்து 90% ஆக உயர்த்தியதும் சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொள்வதை 80% லிருந்து 87% ஆக உயர்த்தியதும் நாடு பொருத்தமான பொருளாதார வெற்றியினை அடைந்து கொள்வதையே சுட்டிக்காட்டுகின்றன. மிலேனிய அபிவிருத்தி இலக்குகளில் (MDG's) சிலவற்றினை அதன் இலக்கு வருடமான 2015ற்கு முன் அடைந்து கொண்டமையினையே இந்த மெச்சப்படக்கூடிய சாதனைகள் எடுத்துக் காட்டுகின்றன.

இத்தேசிய செயற் திட்டத்தினால் இனங்காணப்பட்டுள்ள பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள் அவற்றுக்கான கொள்கைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் உள்வாங்கிக் கொள்வதனூடாக குறிப்பிட்ட உரிமைகளை வலுப்படுத்தல் மற்றும் அவ்வுரிமைகளுக்கான உத்தரவாதமளித்தல் போன்றவற்றை கவனக்குவிப்பாகக் கொண்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயற்றிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கல்வி | 1.1 | அங்கவீனமான சிறுவர்கள் தரமான கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான சமமான வாய்ப்பு | 1.1.a | ஆரம்ப மட்டத்திலும் இரண்டாம் மட்டத்திலும் அங்கவீனமான சிறுவர்கள் தரமான கல்வியைப் பெறுவதற்கு ஒப்புரவற்ற வாய்ப்புக்கள் | அங்கவீனமான சிறுவர்கள் மத்தியில் அடிப்படை மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி மட்டங்களில் உயர்மட்டத்தில் தளர்ச்சி காணப்படுவதற்கான காரணங்களை கண்டறிவதற்கான ஆய்வினை நடத்துதல். | அறிக்கை பூர்த்தியாக்கப்பட்டுள்ளது | 1 வருடம் | கல்வி அமைச்சு |
| | | | | | | ஆய்வின் அடிப்படையில் இத்தளர்ச்சியினைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | பரிந்துரைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன | 2 வருடங்கள் | |
| | | | | | | அங்கவீனமான சிறுவர்களில் கவனம் குவித்து ஆசிரியர் கல்வியைத் தொடர்வதை உள்ளடக்கும் கற்பித்தல் உபாய மார்க்கங்களை மொடியுளில் உள்ளடக்குதல் | ஆசிரியர் கல்வியில் மொடியுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2 வருடங்கள் | |
| | | | | | | அங்கவீனமான சிறுவர்கள் பாடசாலைகளில் பூரணமாகப் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களை வழங்குவதற்காக பௌதீக வசதிகளை மேம்படுத்துதல் | பூரண பங்குபற்றலை மேம்படுத்துகின்ற முன்னேற்றப்பட்ட வசதிகளுடன் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | சிறுவர்நேய பாடசாலைகளை உருவாக்குவதில் அங்கவீனமான சிறுவர்களை ஒப்புரவு மட்டத்தில் உள்ளடக்குதல் | அங்கவீனமான மாணவர்களை உள்ளடக்கும் மாணவர்நேய பாடசாலைகளின் விழுக்காடு | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | 1.1.b | அங்கவீனமான மாணவர்கள் தரமான மூன்றாம் நிலைக் கல்வியை பெற்றுக் கொள்வதற்கு ஒப்புரவற்ற வாய்ப்புக்கள் | அங்கவீனமான மாணவர்களை உள்வாங்குவதற்கு சகல பல்கலைக் கழகங்களுக்கும் தேவையான வசதிகளை வழங்குதல். | பல்கலைக்கழகங்களில் சேரும் அங்கவீனமான மாணவர்களின் விழுக்காடு | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | உயர் கல்வி அமைச்சு |
| | | | | 1.1.c | அங்கவீனமான மாணவர்கள் முறைசாராக் கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு போதிய வாய்ப்புக்கள் கிடைக்காமை | அங்கவீனமான மாணவர்களை உள்வாங்குவதற்கு சகல ஆசிரியர்கள் மற்றும் மையங்களின் ஆற்றலினை அதிகரித்தல். | முறைசாரா மையங்களில் பதிவு செய்யும் அங்கவீனமான மாணவர்களின் விழுக்காடு | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | கல்வி அமைச்சு |
| | | 1.2 | சகல பாடசாலைகளிலும் தரமான கல்வி | 1.2.a | தரமான கல்வியில் வேறுபாடுகள் | பௌதீக வசதிகள் மற்றும் கற்பித்தல் பதவிநிலை (cadre) பற்றிக் கல்வி அமைச்சினால் குறித்துரைக்கப்பட்டுள்ளதும் தற்போது இருக்கின்றதுமான விதிகளை அமுல்படுத்துதல் | உபகரணங்களைப் பெற்றுள்ள சிரேஸ்ட இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் விழுக்காடு | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தரமான கற்பித்தலை உறுதிப்படுத்துவதற்காக வலய மற்றும் பிரதேச மட்டங்களில் அதிபர்கள் உள்ளிட்ட கல்வி ஆளணியினரின் ஆற்றலினை வலுப்படுத்துதல் | ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் நிறுவப்பட்டு அல்லது தரமுயர்த்தப்பட்டு அத்துடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை | +5 வருடங்கள் | |
| | | | | | | தரமான கல்வியை உறுதிப்படுத்துவதற்காக மாகாண மட்டத்தில் கண்காணிப்புப் பொறிமுறை ஒன்றை நிறுவுதல் | தர உத்தரவாதப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது | +2 வருடங்கள் | தேசிய கல்வி ஆணைக்குழு |
| | | | | | | | மதிப்பீடு மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | | மாகாண, வலய மற்றும் பிரதேச மட்டத்தில் பாடசாலைகளில் தொழில்வாண்மை ரீதியாக தகுதிபெற்றவர்களின் எண்ணிக்கை (நெறிகள், திறன்கள், ஆளுமை மற்றும் மாணவர் பின்னூட்டல் ஆகியவை உள்ளிட்டவற்றின் மதிப்பீடு) | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | கல்வி அமைச்சு |
| | | | | | | | கண்காணிப்புப் பொறிமுறை நிறுவப்பட்டுள்ளது. | +1 வருடம் | மாகாண கல்வி அமைச்சு |
| | | | | 1.2.b | ஆசிரியர் பயிற்சி மற்றும் பாடவிதான உருவாக்கம் தொடர்பான பற்றாக்குறை | ஆசிரியர் பயிற்சியிலும் வளங்களை விருத்தி செய்வதிலும் மாற்றுவடிவங்களை மதிப்பிடுதல் | அடையாளங்காணப்பட்ட மாற்று முறைகள் | 2 வருடங்கள் | கல்வி அமைச்சு |
| | | 1.3 | அறிவியல் கல்விக்கான சமமான வாய்ப்பு | 1.3.a | இரண்டாம் நிலை மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வி நிலைகளில் அறிவியற் கல்விக்கு ஒப்புரவற்ற வாய்ப்புக்கள் | சகல சிரேஷ்ட இரண்டாம் நிலை பாடசாலைகளையும் ஆசிரியர்களைக் கொண்டும் விஞ்ஞானத் தொழில்நுட்பக் கல்வியினைக் கொண்டும் தயார்படுத்துதல் | வசதிகளைக் கொண்டுள்ள பாடசாலைகளின் விழுக்காடு | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1.4 | தரமான மூன்றாம் நிலைக் கல்வியைச் சமமாகப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு | 1.4.a | தரமான மூன்றாம் நிலைக் கல்வியினைப் பெற்றுக் கொள்வதில் ஒப்புரவற்ற வாய்ப்பு | தற்போது இருக்கின்ற நிறுவனங்களின் ஆற்றலினை மேம்படுத்தல் | போதிய திறன் மற்றும் பயிற்சியுடைய பணியாளர்களின் எண்ணிக்கை | + 3 வருடங்கள் | மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழு |
| | | | | | | | உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன | | |
| | | | | | | கேள்வியின் அடிப்படையில் தொழில்வாண்மைத் தராதரங்களை வழங்குவதற்கு புதிய நிறுவனங்களை உருவாக்குதல் | நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன | + 3 வருடங்கள் | |
| | | | | | | பாடசாலையை விட்டு விலகுவோருக்கு உதவுவதற்காக கல்வி அமைச்சில் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கல் / விஸ்தரித்தல் | நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. | + 1 வருடம் | கல்வி அமைச்சு |
| | | | | | | | நிகழ்ச்சித்திட்டத்தினால் நடத்தப்பட்ட செயற்பாடுகளின் எண்ணிக்கை | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | 1.5 | தரமான தொழிற் கல்விக்கான சமமான வாய்ப்பு | 1.5.a | தரமான தொழிற் கல்விக்கான போதிய ஏற்பாடுகள் இன்மையும் போதிய விநியோகம் இன்மையும் | தேசிய தொழில் பயிற்சி தகைமை திட்டத்தின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினை வலுப்படுத்துதல் | ஒவ்வொரு NVQ மட்டத்திலும் தகுதி பெற்றுள்ள மாணவர்களின் விழுக்காடு | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு |
| | | | | | | தொழில்நுட்பக் கல்வியில் சேருவதில் காட்டப்படும் பால்நிலை ஏற்றத்தாழ்வுகளை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் குறைத்தல் | தொழில்நுட்பக் கற்கை நெறிகளில் பெண்கள் சேர்வதன் விழுக்காடு | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சு |
| | | | | | | தரமான தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதில் மாவட்டங்களினுள்ளும் மாவட்டங்களுக்கு இடையிலும் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல் | மாவட்டத்தின் அடிப்படையில் கீர்த்தி வாய்ந்த நிறுவனங்களின் எண்ணிக்கை | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தராதர மட்டங்களில் மாற்றம் (தரமிடல் முறைமை) | | |
| | | 1.6 | பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு கல்வியினை வழங்கு வதற்கான வசதியினை வழங்குதல் | 1.6.a | முறைசாராக் கல்வி வாய்ப்புக்கான போதிய வாய்ப்புக்கள் இன்மை | பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் முறைசார் கல்வி முறைமையினுள் நுழைவதற்கு அல்லது மீள நுழைவதற்கு இயலுமாக்குவதற்காக முறைசாராக் கல்வி மையங்களை வலுப்படுத்துதல் | முறைசாரா மையங்களில் உள்ள பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களின் விழுக்காடு | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | கல்வி அமைச்சு |
| | | | | | | பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களை முறைசார் முறைமையினுள் ஒன்றிணைப்பதற்காகவும் அவர்களின் அடைவுகளை சான்றுப்படுத்துவதற்காகவும் செயல்நிறைவேற்றுகையை மதிப்பிடுவதற்கு பொறிமுறைகளை உருவாக்குதல் | பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள முறைசாரா மையங்களில் உள்ள மாணவர்களின் விழுக்காடு | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | பாடசாலையை விட்டு விலகிய வளர்ந்த மாணவர்கள் செயற்பாட்டிற்கான எழுத்தறிவினையும் தொழிற்பயிற்சி திறன்களையும் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் | தேசிய தொழில்பயிற்சி தகைமையினை 1 அல்லது 2 ஆம் மட்டங்களில் பெறும் வளர்ந்த பாடசாலையை விட்டு விலகிய பிள்ளைகளின் விழுக்காடு. | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| 2. | சுகாதாரம் | 2.1 | சுகவீனமடைவதற்கான பாதிப்புறு நிலையினைக் குறைத்தல் | 2.1.a | தரமான சுகாதாரப் பராமரிப்பினை அடைந்து கொள்வதில் ஒப்புரவின்மை | சகல வைத்தியசாலைகளினதும் தற்போதைய மனிதவள உட்கட்டமைப்பு வசதிகளைப் பற்றிய மீளாய்வினை நடத்துதல் | மீளாய்வு நடத்தப்பட்டது | + 6 மாதங்கள் | சுகாதார அமைச்சு |
| | | | | | | நிறுவப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய சகல அரச வைத்தியசாலைகளிலும் உபகரணம் உள்ளிட்ட மனித வளங்களும் உட்கட்டமைப்பு வசதிகளும் கிடைக்கக்கூடியதாக உள்ளன என்பதை உறுதிப்படுத்துதல் | வெளியிடப்பட்ட நியமங்கள் பூர்த்தி செய்யப்பட்டு வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டன | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | சகல வைத்தியசாலைகளிலும் மருந்துகள் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றமை பற்றிய மீளாய்வினை நடாத்தல் | மீளாய்வு நடத்தப்பட்டது | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | | ஒவ்வொரு நிலையத்திலும் கிடைக்கக்கூடியதாகவுள்ள அத்தியாவசிய மருந்துகள் | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2.2 | வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளை மிகவும் வினைத்திறன் மிகு முறையில் விநியோகித்தல் | 2.2.a | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை முன்னேற்றகரமான முறையில் பயன்படுத்துவதற்கான தேவை | அரச நிதியினை விநியோகிப்பதில் காணப்படும் இடைவெளிகளை அடையாளம் காண்பதற்கு தற்போதுள்ள ஆய்வுகளைத் திரட்டுதல் | இடைவெளிகளை அடையாளம் காணுதல் | + 3 மாதங்கள் | |
| | | | | | | | தரமான சுகாதார சேவையினை அணுகுதல் | | |
| | | | | | | மருந்துப் பொருட்களுக்கான கொள்வனவுத் திட்டமிடல் குழுவினை நியமித்தல் | குழு நியமிக்கப்பட்டது | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | 2.3 | தடுப்பூசி ஏற்றுதலில் சர்வதேச ரீதியான உள்ளடக்கம் | 2.3.a | தடுப்பூசி ஏற்றுதலில் உள்ளடக்கும் தன்மையில் இடைவெளிகள் | தடுப்பு மருந்து ஏற்றுவதில் காணப்படும் இடைவெளிகளை அடையாளம் கண்டு பரிந்துரைகளை மேற்கொள்ளுதல் | அறிக்கை கிடைக்கக் கூடியதாக இருத்தல் | + 6 மாதங்கள் | சுகாதார அமைச்சு |
| | | | | | | உப தேசிய மட்டத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை இல்லாதொழிப்பதற்கு பரிந்துரைகளை அமுல்படுத்துதல் | சகல பரப்புக்களிலும் உள்ளடக்கப்படுதல் | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | 2.4 | பிரசவத்தின் போது நிகழும் தவிர்க்கக்கூடிய இறப்பினை இல்லாதொழித்தல் | 2.4.a | பிரசவத்தின்போது நிகழும் தவிர்க்கக்கூடிய இறப்பு நிலவுதல் | அவசர மகப்பேற்று பராமரிப்பினை முன்னேற்றுதல் | அவசர மகப்பேற்று பராமரிப்பின் மூலம் தவிர்க்கப்பட்ட பிரசவத்தின் போது நிகழும் மரணங்களின் எண்ணிக்கை | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | 2.5 | சுகாதாரப் பராமரிப்பினை சமமாக அடைந்து கொள்ளுதல். | 2.5.a | HIV நிலையின் அடிப்படையில் பாகுபாடு காட்டுதலும் போதிய சுகாதாரப் பராமரிப்பிற்கான அணுகலை மட்டுப்படுத்தலும் | சுகாதார பராமரிப்பு உத்தியோகத்தர் மத்தியில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட சுகாதாரப் பராமரிப்பு தொழில் ஊழியர்களின் விபரம் | | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட சுகாதாரப் பராமரிப்பு தொழில் ஊழியர்களின் எண்ணிக்கை | | |
| | | | | | | சர்வதேச முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக வசதிகளை வழங்குதல். (Barrier Nursing) | | + 1 வருடம் | |
| | | | | | | சுகாதார ஊழியர்கள் மத்தியில் மனப்பாங்கு சார்ந்த கணிப்பீடுகளை நடத்துதல் | சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் சுகாதார ஊழியர்களின் மனப்பாங்கில் மாற்றம் | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2.6 | சுகாதாரப் பராமரிப்புத் தொடர்பான உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு | 2.6.a | கிடைக்ககூடிய வசதிகள் மற்றும் வகைப்பொறுப்புப் பொறிமுறைகள் பற்றிப் பூரண அறிவின்மை | அத்தியாவசிய சுகாதாரப் பராமரிப்பின் மூலகங்கள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வு பிரச்சாரத்தினை நடத்துதல் மருத்துவ சீர்கேடுகளுக்குப் பரிகாரங்கள் உள்ளடங்கலாக | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை | | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் விபரம் | | |
| | | | | | | அத்தியாவசிய சுகாதாரப் பராமரிப்பு மூலகங்கள் பற்றி சகல சுகாதார பராமரிப்பு மையங்களுக்கும் தகவல்களை வழங்குதல் | தகவல்களைக் கொண்டுள்ள சுகாதாரப் பராமரிப்பு மையங்களின் எண்ணிக்கை | | |
| | | | | | | | சுகாதாரப் பராமரிப்பு முறைமைகளை அணுகுவதில் மாற்றம் | | |
| | | 2.7 | நோயாளிகளின் உரிமைகளுக்கு மதிப்பளித்தல் | 2.7.a | நோயாளிகளின் உரிமைகளை அங்கீகரிக்காமை | ஒரு மதியுரைச் செயன்முறையின் மூலம் நோயாளிகளின் உரிமைகள் தொடர்பாக சாசனம் ஒன்றினை உருவாக்குதல் | மதியுரை பெறப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் எண்ணிக்கை | +2 வருடங்கள் | |
| | | | | | | | மதியுரைகளின் எண்ணிக்கை | | |
| | | | | | | | உருவாக்கப்பட்டு ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட சாசனம் | | |
| 3. | நீர் | 3.1 | அனைவருக்கும் நீடுறுதியான நீர் விநியோகத்தினை உறுதிப்படுத்துதல் | 3.1.a | நிலக்கீழ் நீர் வளங்கள் அருகிப்போதல் | நிலக்கீழ் நீர் அருகிப்போவதற்கான காரணங்களை அடையாளங்காண ஆய்வுகளை நடத்துதல். அதற்கு பரிகார நடவடிக்கை எடுத்தல். நீர் வளங்கள் தொடர்பான சர்வதேச நடவடிக்கைகளை பின்தொடர்தல். பாதுகாப்பான நீர் மூலங்களுக்கு மாற்றீடு செய்தல் | ஆய்வு நடத்தப்பட்டது | 1 வருடம் | நீர்விநியோக வடிகாலமைப்பு அமைச்சு |
| | | | | | | | பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டன | தற்பொழுது நடைபெற்று வருபவை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல்திறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4. | தொழில் வாய்ப்பு<br><br>பொதுட | 4.1 | அரச துறையிலும் தனியார்ர் துறையிலும் சகலருக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்குதல் | 4.1.a | சமமான வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடியதை உறுதிப்படுத்துவதற்கான தேவை | தொழிலில் பாகுபாடு நிலவும் சந்தர்ப்பங்களை / பரப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக அடிப்படை கணிப்பீடு ஒன்றை நடத்துதல் | கணிப்பீட்டு அறிக்கை | +1 வருடம் | தொடர்புடைய லைன் அமைச்சுக்கள் |
| | | | | | | கணிப்பீட்டின் அடிப்படையில் செயற்பாடுகளை அமுல்படுத்தல் | செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன | வருடாந்த அடிப்படையில் தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| 5. | தொழில் வாய்ப்பு-அங்கவீனமான நபர்கள் | 5.1 | அங்கவீனமான நபர்கள் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான சமமான வாய்ப்பு | 5.1.a | அங்கவீனமான நபர்கள் மத்தியில் தொழில்வாய்ப்பின்மை மட்டத்தைக் குறைப்பதற்கான தேவை | அங்கவீனமான நபர்களை உள்ளடக்குவதற்காக போதிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | பொருத்தமான நிகழ்ச்சித்திட்டம் மூலமாக தொழில்வாய்ப்பினை பெற்றுக் கொண்டுள்ள அங்கவீனமான நபர்களின் விழுக்காடு | தற்பொழுது நடைபெற்று வருபவை | தொடர்புடைய லைன் அமைச்சுக்கள் |
| | | | | | | அங்கவீனமான நபர்களுக்கு தொழில் வாய்ப்பினை வசதிப்படுத்துவதற்காக தொழில் பயிற்சி வழிகாட்டல் மையங்களின் ஆற்றலினை வலுப்படுத்தல் | தொழிற்பயிற்சி வழிகாட்டல் மையங்களில் பதிவு செய்துள்ள அங்கவீனமான நபர்களின் விழுக்காடு | தற்பொழுது நடைபெற்று வருபவை | தொடர்புடைய லைன் அமைச்சுக்கள் |
| | | | | | | அங்கவீனமான பயிலுநர்களை சகல தரப்புக்களிலும் உள்ளடக்குவதற்காக தொழிற்பயிற்சி அதிகார சபையின் கீழ்வரும் நிறுவனங்களின் ஆற்றலினை வலுப்படுத்துதல் | தேவைப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் கிடைக்கக்கூடியதாக இருத்தல் | +5 வருடங்கள் | தொடர்புடைய லைன் அமைச்சுக்கள் |
| | | | | | | | அங்கவீனமான நபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக திறன்களுடன் பயிற்றப்பட்ட பணியாளர்கள் | | |
| | | | | | | | பயிற்சியினைப் பெற்றுக்கொண்ட அங்கவீனமான நபர்களின் விழுக்காடு | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | கலாச்சார உரிமைகள் | 6.1 | இந்த உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக எங்கும் வியாபிக்கின்ற கலாச்சாரக் கொள்கையும் பொறிமுறையும் | 6.1.a | தேசிய ஒருங்கிணைப்பிற்கான தேவை எனும் சூழமைவில் கலாசாரப் பன்மை வாதத்தை மெச்சுவதற்கான பாரிய தேவை | சிவில் சமூகப் பிரதிநிதித்துவம் உள்ளடங்கிய, நிபுணர்கள் சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்களைக் கொண்ட பல்துறைசார் கலாசாரச் செயலணியினை உருவாக்குதல் | செயலணி நிறுவப்பட்டது | + 6 மாதங்கள் | கலை மற்றும் கலாசார அமைச்சு |
| | | | | | | கல்வி அமைச்சு, ஊடகத்துறை அமைச்சு, கலாச்சார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் ஒத்துழைப்புடனும் ஒருங்கிணைப்புடனும், சிவில் சமூகம், சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்கள் மற்றும் துறையிலுள்ள நிபுணர்களின் மதியுரை ஆலோசனையுடனும் கலாசாரம் பற்றிய எங்கும் வியாபிக்கின்ற பூரணமான உபாயமார்க்கத்தினை உருவாக்குதல் | கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது | + 6 மாதங்கள் | |
| | | | | | | | அமைச்சுக்கள் சம்பந்தப்பட்டுள்ளன | | |
| | | | | | | | ஏனையோர் ஆலோசிக்கப்பட்டனர் | | |
| | | | | | | கலை மற்றும் கலாச்சாரத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்து நடத்துதல் | நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டது | + 6 மாதங்கள் | கலை மற்றும் கலாசார அமைச்சு |
| | | | | | | | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை (பிராந்திய உள்ளடக்கம்) | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை | | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்டவர்களின் குடிசனப் பரம்பல் விபரம் | | |
| | | 6.2 | கலாசாரச் செழுமை, கலாச்சாரங்களுக்கு இடையில் ஒற்றுமையினை மேம்படுத்துதல் அத்துடன் சமூகத்திற்கு பொருத்தமான கலைப்படைப்புக்களை உருவாக்குதல் அத்துடன் கலைஞர்களின் நல்வாழ்வு | 6.2.a | கலை கலாசாரத்திற்கும் சம்பந்தப்பட்ட உட்கட்டமைப்புக்களுக்கும் நிதி வழங்குவதற்கு பொதுநிதி இல்லாதிருத்தல் | தேவைப்படும் வளங்களை திரட்டுவதற்கான சாத்தியங்களை ஆராய்தல் | நிதி திரட்டப்பட்டது | + 1 வருடம் | கலை மற்றும் கலாசார அமைச்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நிதியினை வெளிப்படைத் | வழிகாட்டல்கள் நிறுவப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன | +6 மாதங்கள் | |
| | | | | | | | வருடாந்த பங்கீடு வெளியிடப்பட்டுள்ளது | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | தேசிய பல்கலாசார நாட்டிய நாடக அகடமிகளை நிறுவுதல். | நிறுவப்பட்டுள்ள அகடமிகளின் எண்ணிக்கை | +3 வருடங்கள் | |
| | | 6.3 | சுதேச மக்களின் சமூக கலாச்சார உரிமைகளை உறுதிப்படுத்துதல் | 6.3.a | சுதேச மக்களின் தன்னாட்சி மற்றும் உரிமைகள் மீது பாரிய கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவை | ஒரு ஆலோசனைச் செயன்முறையின் மூலம் சுதேச மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு தற்போது இருக்கின்ற சட்டங்களையும் கொள்கைகளையும் நடைமுறைகளையும் மீளாய்வு செய்வதும் திருத்துவதும் அல்லது கொள்கைகளை இயற்றுவதும் | மீளாய்வு செய்யப்பட்ட சட்டங்கள், கொள்கைகள், மற்றும் நடைமுறைகள் மற்றும் பரிந்துரைகள் | +6 மாதங்கள் | கலை மற்றும் கலாசார அமைச்சு |
| | | | | | | | பரிந்துரைகளின் அடிப்படையில் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் திருத்தப்பட்டுள்ளன மற்றும் அறிமுகப்படுத்தப்பட்டன | +1 வருடம் | |
| | | | | | | கொள்கைகள் அமுல்படுத்தப் படுவதை கண்காணிப்பதற்கு ஒரு கண்காணிப்பு பொறிமுறையினை நிறுவுதல் | கண்காணிப்புச் செயன்முறை நிறுவப்பட்டுள்ளது | +6 மாதங்கள் | |
| 7. | மொழி உரிமைகள் | 7.1 | உத்தியோகபூர்வ மொழிக் கொள்கையினை அமுல்படுத்துதல் | 7.1.a | அரச மொழிக் கொள்கையினை அமுல்படுத்துவதில் குறைபாடுகள் | மக்கள் அவர்களின் தெரிவுக்குரிய மொழிகளில் சேவைகளைப் பெறுவதை உறுதி செய்தல் மேலும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் அரசகரும மொழிக் கொள்கை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் இரண்டு அரசகரும மொழிகளையும் சகல உத்தியோகபூர்வ ஆவணங்களிலும் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தல், | செயன்முறை அமுலில் உள்ளது | 1 வருடம் | மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சு |
| | | | | | | மக்கள் இயக்கங்களை நிறுவுவதன் மூலம் மக்களின் மொழி உரிமையினை வலுப்படுத்துதல் (மொழிக்குழு) | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 7.2 | இலங்கை மும்மொழிச் சங்கத்திற்கான அடிப்படைத் திட்டத்தினை அமுல்படுத்தல் | 7.2.a | இலங்கைக்கான அடையாளத்தினை உருவாக்குவதற்கான தேவை | பத்து வருட அடிப்படைத் திட்டத்தினைத் தயாரித்தல் | திட்டம் அமுலிலுள்ளது | 6 மாதங்கள் | சனாதிபதி செயலகம் |
| 8. | பாதிப்புறு நிலையிலுள்ள குழுக்கள் - தனித்த பெற்றோரைக் கொண்ட குடும்பங்கள் | 8.1 | தனித்த பெற்றோரைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவி முறைமையினை உறுதிப்படுத்துதல் | 8.1.a | தனித்த பெற்றோரைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கும் உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கும் உதவி வழங்குவதற்கான பாரிய தேவை | பாதிப்புறு நிலையிலுள்ள குடும்பங்களை அடையாளம் காண்பதற்காக சகல மாவட்டங்களிலும் ஆய்வினை நடத்தி தனித்த பெற்றோரைக் கொண்ட குடும்பங்களைப் பற்றிய தரவுகளைச் சேகரித்தல் (ஆண் அல்லது பெண்) | ஆய்வு நடத்தப்பட்டது. மிகவும் பாதிக்கப்பட்ட குழுக்கள் பண்புகள், தேவைகள் அடையாளங்காணப்பட்டன. | +6 மாதங்கள் | குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபர திணைக்களம் |
| | | | | | | ஆய்வின் அடிப்படையில் தனித்த பெற்றோரைக் கொண்ட குடும்பங்களுக்கு உதவியினை வடிவமைத்து வழங்குதல். | 5 முக்கியமான மாவட்டங்களில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன | +2 வருடங்கள் | சமூக சேவைகள் அமைச்சு |
| | | | | | | | ஏனைய மாவட்டங்களில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| 9. | பாதிப்புறு நிலையிலுள்ள குழுக்கள்- அங்கவீனமானோர் | 9.1 | சகலரும் பூரணமாகப் பங்குபற்றுவதை இயலுமாக்குவதற்காக சர்வதேச வடிவமைப்பு எனும் கோட்பாட்டின் கீழ் அணுகக்கூடிய சுற்றாடலை உருவாக்குதல் | 9.1.a | பௌதீகச் சூழலில் அங்கவீனமான நபர்கள் செல்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளே காணப்படுகின்றமையானது அவர்கள் சமுதாய வாழ்க்கையில் பங்குபற்றுவதற்கான ஒரு தடையாகவும் அவர்களின் பொருளாதார கலாசார மற்றும் சமூக உரிமைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு தடையாகவும் காணப்படுகின்றன | கட்டிடங்களை அணுகுவதில் அரசாங்க ஒழுங்கு விதிகளினை அமுல்படுத்துவதனை மேம்படுத்துதல் | அரசாங்க ஒழுங்கு விதிகளின் படி பொது மக்களால் பயன்படுத்தப்படும் சகல புதிய கட்டிடங்களும் | 5 வருடங்கள் | நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் |

Foot note: பிரதான பங்காளர் முகவர்கள்: சமுர்த்தி, சிவில் சமூக நிறுவனங்கள், PUBAD, மாகாண சபைகள், பிரதேச மற்றும் மாவட்டச் செயலகங்கள், NCPA, MCDWE, UNICEF, மற்றும் ஏனைய பொருத்தமான UN நிறுவனங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9.2 | அங்கவீனமான நபர்கள் பொதுப் போக்குவரத்தில் செல்லக்கூடிய நிலையினை உருவாக்குதல். இதனால் அவர்கள் பயணம் செய்யக்கூடியதாக இருப்பதுடன் சுதந்திரமாக பங்குபற்றக்கூடியதாகவுமிருத்தல் | 9.2.a | அங்கவீனமான நபர்கள் பயணம் செய்வதில் காணப்படும் தடைகளும் அவர்களின் நடமாட்ட சுதந்திரத்தில் காணப்படும் தடைகளும் சமுதாய வாழ்க்கையில் அவர்கள் பங்குபற்றுவதற்கு அவர்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிப்பதுடன் அவர்களின் பொருளாதார, கலாசார மற்றும் சமூக உரிமைகளை அடைந்து கொள்வதற்கும் கட்டுப்பாடு விதிக்கின்றது | அரச போக்குவரத்தில் அணுகல் பற்றிய அரசாங்கத்தின் ஒழுங்கு விதிகளை மேம்படுத்தி அமுல்படுத்துதல் | அரசாங்க ஒழுங்கு விதிகளின் படி அரச போக்குவரத்தினை அணுகக் கூடியதாக இருத்தல் | 5 வருடங்கள் | போக்குவரத்து அமைச்சு |
| | | 9.3 | புலமை மற்றும் ஏனைய விருத்தி சார்ந்த ஆற்றல்களில் இயலாமையைக் கொண்டுள்ள மேலும் மோசமான அங்கக் குறைபாடுகளைக் கொண்டுள்ள சிறுவர் மற்றும் வளர்ந்தோர் மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரத்தினைக் கொண்டிருப்பர் | 9.3.a | புலமை மற்றும் ஏனைய விருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் இயலாமையைக் கொண்டுள்ள மற்றும் மோசமான அங்கக் குறைபாடுகளைக் கொண்டுள்ள சிறுவர் மற்றும் வளர்ந்தோர் போன்ற விசேட தேவையுடைய குழுக்களுக்கு தேவைப்படுகின்ற தரமான சேவைகளையும் இடையீடுகளையும் உதவியினையும் வழங்குதல் | பங்கீடுபாட்டாளர்களுடனான மதியுரைக் கலந்தாலோசிப்புடன் தேவைகளை மதிப்பீடு செய்து புலமை மற்றும் ஏனைய விருத்தி சார்ந்த துறைகளில் குறைபாடுடைய மற்றும் மோசமான அங்கக் குறைபாடுடைய சிறுவர்கள் மற்றும் வளர்ந்தோரின் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்காக இடையீடுகளை முன்னேற்றுவதற்கு, வீடு மற்றும் சமுதாய அடிப்படையிலான உபாயமார்க்கங்களை வலுப்படுத்துதல் | தேவைகள் மதிப்பிடப்பட்டுள்ளன, நிகழ்ச்சித்திட்டங்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன | 3 வருடங்கள் | சமூக சேவைகள் அமைச்சு |
| | | 9.4 | தனித்து வாழமுடியாத மேலும் தொடர்ச்சியான பராமரிப்புத் தேவைப்படுகின்ற அங்கவீனமான நபர்களின் வதிவிடப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் | 9.4.a | சுயாதீனமாக வாழ முடியாத மேலும் தொடர்ச்சியான பராமரிப்புத் தேவைப்படுகின்ற மற்றும் பெற்றோர்களின் மரணத்தின் பின் எதிர்கால வதிவிடம் தொடர்பாக பாதுகாப்பற்ற உணர்வினை உணருகின்ற பெற்றோரைக் கொண்ட அங்கவீனமான நபர்கள் | தனித்து வாழ முடியாத மேலும் தொடர்ச்சியான பராமரிப்பினை வேண்டுகின்ற அங்கவீனமான நபர்களுக்கு வதிவிடமாக சமுதாய வீடமைப்பினை வழங்குகின்ற புத்தாக்கமிகு உபாய மார்க்கங்களை பங்கீடுபாட்டாளர்களுடன் சேர்ந்து தேவைகளை மதிப்பிட்டு வடிவமைத்துப் பரிசீலித்தல் | உபாயமார்க்கங்கள் அமுலிலுள்ளன மற்றும் பரிசீலிக்கப்படுகின்றன | 4 வருடங்கள் | சமூக சேவைகள் மற்றும் சுகாதார அமைச்சு |
| | | 9.5 | மனநல சுகாதாரத்தினை சகல அம்சங்களினாலும் நோக்குகின்ற பூரண கொள்கையொன்றினை உருவாக்குதல் | 9.5.a | உளநலக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் | தற்போதுள்ள கொள்கைகளை மீளாய்வு செய்தல் மேலும் இடைவெளிகளை அடையாளம் கண்டு அவற்றினை திருத்துதல் | கொள்கை உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது | 3 வருடங்கள் | சமூக சேவைகள் அமைச்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்குரிய பரப்பு | இலக்கு | | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல்நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | காலவரம்பு | பிரதான பொறுப்பிற்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10. | ஊழல் | 10.1 | ஊழலை இல்லாதொழிப்பதற்காக பொறிமுறைகளை வலுப்படுத்துதலும் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக வகைப்பொறுப்பினை அதிகரித்தலும் | 10.1.a | ஊழலை எதிர்கொண்டு தீர்ப்பதற்கு தற்போது இருக்கின்ற பொறிமுறைகளை வலுப்படுத்துவதற்கான தேவை | தேசிய ஊழலுக்கெதிரான செயற்திட்டத்தினை அமைச்சர்களிடம் சமர்ப்பித்தல் | திட்டத்தினை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் | 3 வருடங்கள் | இலஞ்ச ஊழல் மற்றும் குற்றப்புலனாய்வு ஆணைக்குழு |
| | | | | | | இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிப்பத்றகு ஆணைக்குழுவின் ஆற்றலினை வலுப்படுத்தி அதிகரித்தல் | CIABC ஆணையாளரின் அரசியலமைப்பு ரீதியான நியமனம் | வருடாந்தம் நடைபெற்று வருபவை | |
| | | | | | | | முறைப்பாடுகளின் விழுக்காடாக தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | | |
| | | | | | | | வெற்றிகரமான வழக்குகளின் எண்ணிக்கை | | |
| | | | | | | சாட்சிப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத் தொடர்பான சட்டத்தினை இயற்றல் | சட்டவாக்கம் இயற்றப்பட்டது | + 1 வருடம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதையினைத் தடுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதையினைத் தடுத்தல்

அரச கொள்கை மற்றும் நடைமுறை சார்ந்த விடயம் என்கின்ற ரீதியில் இலங்கை அரசாங்கமானது சித்திரவதை தொடர்பாக அறவே சகிப்புத் தன்மையினைக் கொண்டிராததாக இருக்கின்றது. 2008 ஆம் ஆண்டு பெப்ரவரியிலே நடைபெற்ற மனித உரிமைக் கவுன்சிலின் ஏழாவது அமர்விலே சித்திரவதை மற்றும் ஏனைய குரூரமான, மனிதாபிமானமற்ற அல்லது அவமானப்படுத்துகின்ற வகையில் நடத்துதல் அல்லது தண்டித்தல் தொடர்பான விசேட தூதுவரான திரு. மென்பிரெட் நோவாக் சமர்ப்பித்த அறிக்கையிலே இந்த விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சித்திரவதையினைத் தடுப்பதற்கும் அதனை எதிர்ப்பதற்கும் அதே போல் குற்றத்தினை இழைத்தோரை வகைப்பொறுப்புக் கூற வைப்பதற்கும் இலங்கை அரசாங்கமானது எண்ணற்ற சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அதிலே அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து வடிவிலுமான குரூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் அவமானப்படுத்துகின்ற விதத்தில் நடத்தப்படுதல் அல்லது தண்டிக்கப்படுதலை இல்லாதொழிப்பதற்கான இலங்கையின் கடப்பாடானது அரசியலமைப்பின் உறுப்புரை 11ல் குறித்துரைக்கப்பட்டுள்ளது. இது அனைத்துவடிவிலுமான குரூரமான, மனிதாபிமானமற்ற மற்றும் அவமானப்படுத்துகின்ற விதத்தில் நடத்தப்படுதல் அல்லது தண்டிக்கப்படுதலை குறிப்பாகத் தடை செய்வதுடன் சித்திரவதை செய்யப்படாமலிருப்பதற்கான உரிமையினை பிரிக்கப்படமுடியாததும், திட்டவட்டமானதுமான உரிமையாகவும், மேலும் அந்த உரிமையினை எக் கட்டுப்பாடுகளாலும், வரையறைகளாலும் தடைசெய்யமுடியாது எனவும் குறித்துரைக்கின்றது. 1994ம் ஆண்டின் 22ம் இலக்க சித்திரவதைச் சட்டத்தினையும் 2005ம் ஆண்டின் 23ம் இலக்க சரீர தண்டனை (நீக்கல்) சட்டத்தினையும் இயற்றியமை, அதேபோல் 1997ம் ஆண்டின் 15ம் இலக்கக் குற்றவியல் நடைமுறைக் கோவையில் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறாக உள்ளடங்கியுள்ள பல ஏற்பாடுகளும், சித்திரவதைக்கு எதிராகப் போராடுவதற்காக இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள சாதகமான நடவடிக்கைகளின் தெளிவான வெளிப்பாடுகளாகும்.

தேசிய செயற்திட்டத்திலே சித்திரவதை பற்றிய முன்னுரிமைப் பரப்பானது சமுதாயத்தின் பல உறுப்பினர்கள் மத்தியில் நடத்தப்பட்ட பரந்த அடிப்படையிலான மதியுரை ஆலோசிப்புக்களின் முடிவுப் பெறுபேறாகும்.. சித்திரவதையினைத் தடுப்பதற்கும் விசாரணை செய்வதற்கும் அதனை இல்லாதொழிப்பதற்குமான செயன்முறைகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் இலங்கையின் சர்வதேச மற்றும் உள்நாட்டுக் கடப்பாடுகளை பூரணமாக அமுல்படுத்தும் இறுதி இலக்கினை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ள பல கவனக் குவிப்புப் பரப்புக்கள் இதில் அடங்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சட்டச் சட்டகம் | 1.1 | சாட்சியங்கள் தொடர்பான சட்டங்கள் கவனக் குறைவினால் சித்திரவதையினை ஊக்குவிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துதல் | 1.1.a | சித்திரவதையானது அரசியலமைப்பிலே விலகிச் செல்ல முடியாத ஓர் உரிமையாக இருக்கும் அதேவேளை, நீதிமுறை நடவடிக்கைகளில் சாட்சியத்தின் ஏற்கத்தகும் தன்மையுடன் தொடர்புபட்டுள்ள விதிகள், பல்வேறு வகையான சித்திரவதைகளின் கீழ் பெறப்படும் சாட்சியங்களின் ஏற்கத்தகும் தன்மையினை அவசியம் விலக்கிவைப்பது போல் தெரியவில்லை. (சாட்சியக் கட்டளைச் சட்டம் 27ன் கீழ் மீளப் பெறப்படுபவைகள்) எனவே, இது சித்திரவதை இழைக்கப்படுவதனை கவனக் குறைவினால் ஊக்குவிக்கின்றது அல்லது மேம்படுத்துகின்றது | சாட்சிகளின் ஏற்கத்தகும் தன்மை தொடர்பான தற்போதைய விதிகளை மீளாய்வு செய்யக் குழுவொன்றினை நியமித்தல் | குழு நியமிக்கப் பட்டுள்ளது<br>குழு உறுப்பினர்கள் பற்றிய சுருக்க விபரம்<br>மீளாய்வு நடத்தப்பட்டது | +6 மாதங்கள் | நீதி அமைச்சு |
| 2. | தடுத்து வைப்பும் பின் விசாரணையும். | 2.1 | இலங்கையின் மருத்துவச் சட்டச் செயற்பாடுகளின் தரத்தினை உயர்த்தல் | 2.1.a | நிபுணத்துவம் பெற்ற சட்ட வைத்திய அதிகாரிகள் போதிய எண்ணிக்கையில் இல்லாமையும் போதிய வசதிகள் இல்லாமையும் | இருக்கின்ற வசதிகள் பற்றி மீளாய்வு செய்தலும் முன்னேற்றத்திற்காகப் பரிந்துரை செய்தலும் | மீளாய்வு பூர்த்தியாக்கப் பட்டுள்ளது மற்றும் பரிந்துரைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. | +6 மாதங்கள் | சுகாதார அமைச்சு |
| | | | | | | அறிக்கைக்கேற்ப மருத்துவச் சட்டப் பணிகளிற்கான வசதிகளைத் தரமுயர்த்துதல் | வசதிகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன | +1 வருடம் | |
| | | | | 2.1.b | நிபுணர்களல்லாத சட்ட வைத்திய அதிகாரிகளுக்கு தேவையான தொழில்வாண்மைப் பயிற்சிகளின் பற்றாக்குறை | உடல் மற்றும் உள ரீதியிலான அனைத்து சித்திரவதைகள் குறித்து உள்ளடக்கும் வகையில் சட்ட வைத்திய அதிகாரிகளுக்கான பயிற்சிகளை வழங்குதற்காக காணப்படும் இடைவெளிகளை இனங்காணலும் அது குறித்து மீள்பார்வை செய்தலும் | மீளாய்வு நடத்தப்பட்டுள்ளது<br>பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன | +6 மாதங்கள் | பட்டப் படிப்புக்கு பின்னரான மருத்துவ நிறுவனத்தின் ஊடாக உயர் கல்வி அமைச்சு |
| | | | | | | அழுத்தத்திற்கு முகங்கொடுத்தல் மற்றும் உள சமூக ஆதரவு பற்றிய மொடியல்களை உருவாக்குதலும் சட்ட வைத்திய அதிகாரிகளின் பயிற்சியின் மீயளாய்வில் அடையாளம் காணப்பட்ட ஏனைய பரப்புக்களை அதில் உள்ளடக்குதலும் | மொடியுல் உருவாக்கப் பட்டுள்ளது | +6 மாதங்கள் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பயிற்சி நிகழ்ச்சிகளின் வாயிலாக மொடியுல்களை ஒருங்கிணைத்தல் | பயிற்சிநிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது | +6 மாதங்கள்/ தற்பொழுது நடைபெற்று வருபவை | பட்டப் படிப்புக்கு பின்னரான மருத்துவ நிறுவனத்தின் ஊடாக உயர் கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு. |
| | | 2.2 | சட்ட வைத்திய அதிகாரிகளாக கடமையாற்றும் விசேட சட்ட வைத்திய அதிகாரிகளினதும் வைத்திய அதிகாரிகளினதும் சுயாதீனத்தை உறுதி செய்தல் | 2.2.a | சட்ட வைத்திய அதிகாரிகளின் சுயாதீனத்தினை அதிகரித்தல் | வேண்டுகோளின் அடிப்படையில் பாதுகாப்பு வழங்கல் | | தற்பொழுது நடைபெற்று வருபவை | பாதுகாப்பு அமைச்சு நீதி அமைச்சு |
| 3. | தடுப்பு | 3.1 | தடுத்து வைத்தல் | 3.1.a | தடுப்புக்காவலில் வைக்கப்படும் போதும் தடுத்து வைக்கப்படும் போதும் சித்திரவதை செய்யப்படுவது பற்றிய குற்றச்சாட்டு | சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு மனித உரிமைத் தரங்கள், நவீன கேள்வி நுட்பங்கள் தொடர்பாக பயிற்சிகளை வழங்கலும் மனித உரிமைத் தரங்களைக் கொண்டு விசாரணைகளை மேற்கொள்வதற்காக பொருத்தமான வசதிகளையும் தொழில்நுட்ப ஆற்றல்களையும் வழங்குதல் | பயிற்றுவிக்கப் பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | தற்பொழுது நடைபெற்று வருபவை | பாதுகாப்பு அமைச்சு |
| | | | | | | | வசதிகள் வழங்கப்பட்டுள்ளன | +1 வருடம் | |
| | | | | | | | சித்திரவதை வழக்குகளின் எண்ணிக்கை குறைந்துள்ளமை | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | கைது செய்தலின் நடைமுறைகள் மற்றும் கைது மற்றும் தடுத்துவைப்பின் பின்னரான உரிமைகள் மற்றும் பரிகாரங்கள் பற்றிய பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் | விழிப்புணர்வு மட்டங்கள் தொடர்பான கணிப்பீடு நடாத்தப்பட்டுள்ளது | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | சட்ட ஆட்சி மற்றும் மனித உரிமைத் தராதரங்களுக்கு அமைவாக விசாரணை நடைபெறுவதை ஊக்குவிப்பதற்கு தடுப்புக் காவல் நிலையங்களில் கண்காணிக்கப்படும்(ஓடியோ மற்றும் வீடியோ) விசாரணை அறைகளை அமைத்தல் | கண்காணிப்பு உபகரணங்களுடன் விசாரணை அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை | | |
| | | | | | | | இலக்குவைக்கப்பட்ட மக்களின் குடிசனத் தோற்ற விபரம். | | |
| | | | | | | | பிராந்திய ரீதியிலான நிகழ்ச்சித்திட்ட விநியோகம் | | |
| | | | | | | சித்திரவதைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் பற்றிய புள்ளிவிபரங்கள் அடங்கிய மத்திய தரவுத் தளமொன்றினைப் பேணுதல் | சித்திரவதை தொடர்பான தகவல்தளம் உருவாக்கப்பட்டுள்ளது | +5 வருடங்கள் | |
| | | | | | | சித்திரவதைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் பற்றிய புள்ளிவிபரங்கள் அடங்கிய மத்திய தரவுத் தளமொன்றினைப் பேணுதல் | சித்திரவதை தொடர்பான தகவல்தளம் உருவாக்கப்பட்டுள்ளது | தற்போது நடைபெற்று வருகின்றது. தகவல்தளம் உருவாக்கப்பட்டுள்ளது | பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | 3.2 | சித்திரவதைக்குள்ளானோர் எனக் கூறப்படுபவர்களை விசாரணைக்கு முன்னர் துல்லியமாக நீதவான்களினாலும் வைத்தியர்களாலும் பரீட்சித்தலையும் அடையாளங் காணலையும் உறுதிப்படுத்தல் | 3.2.a | சந்தேக நபர் அல்லாதோரை நீதவான்களின் முன்னும் மருத்துவ அதிகாரிகளின் முன்னும் சமர்ப்பித்தல் அல்லது சந்தேக நபர்களை நீதவான்களின் முன்னும் மருத்துவ அதிகாரிகளின் முன்னும் சமர்ப்பிக்காதிருத்தல் | பாதிக்கப்பட்டவரை மெய்ப்பிப்பதற்காக, உறுதி செய்துகொள்வற்காக மற்றும் அடையாளம் காண்பதற்காக நீதவான், வைத்திய அதிகாரிகளின் முன்(சட்ட வைத்திய அதிகாரி) அவர்களின் பெருவிரல் அடையாளத்தை பெறுவதற்கான முறையொன்றினை நடைமுறைபடுத்தல் | | +6 மாதங்கள் | நீதி அமைச்சு<br>சுகாதார அமைச்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3.3 | இவ்வாறான நபர் மேலும் சித்திரவதைக்கோ அல்லது துன்புறுத்தலுக்கோ உள்ளாக்கப்படுவதிலிருந்தும் பாதுகாத்தல் | 3.3.a | சித்திரவதை நடைபெற்றுள்ளதாகக் குற்றம் சாட்டப்படுகையில், அதனை இழைத்தவரின் பொறுப்பிலான கட்டுக்காவலுக்கு பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும நபரை மீண்டும் அனுப்பப்படாமலிருப்பதை உறுதி செய்தல் | நிர்வாக ரீதியாக அல்லது சட்டரீதியாக அவ்வாறான நடவடிக்கைகளை தடுத்தல் | நிர்வாகச்சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன | +1 வருடம் | நீதி அமைச்சு |
| | | | | | | சித்திரவதைக்குட்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டவர்களின் தடுப்புக்காவலுக்கு சந்தேக நபர்களை அனுப்பாதிருக்கும் ஆணையை வழங்கும் மாற்றுச் செயன்முறை ஒன்றினை நிறுவுதல் | மாற்றுச் செயன்முறைக்கான ஒழுங்கு விதிகள் | +6 மாதங்கள் | பாதுகாப்பு அமைச்சு |
| | | 3.4 | தடுப்புக் காவலில் உள்ளவர்களை பொலிஸார் நடாத்தும் விதங்களை செயற்திறன் மிகு வகையில் கண்காணித்தல் | 3.4.a | சந்தேக நபர் கைது செய்யப்பட்டதற்கும் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சித்திரவதை நடைபெறுதல் | இக் காலப்பகுதியில் தடுப்புக்காவலில் இருக்கையில் சித்திரவதையினைக் கண்காணித்தல் மற்றும் தடுத்தல் தொடர்பான முறைகள் பற்றிப் பூரணமான ஆய்வினை மேற்கொள்ளல் | ஆய்வு நடத்தப்பட்டுள்ளது | +1 வருடம் | பாதுகாப்பு அமைச்சு |
| | | | | | | ஆய்வின் அடிப்படையில் பரிந்துரைகளை மேற்கொள்ளல். | அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது | | |
| | | | | | | பரிந்துரைகளை அமுல்படுத்த நடவடிக்கைகளை எடுத்தல் | பரிகார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன | இரண்டு வருட கட்டத்திலானது | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | | இலக்கு | | விடயம் | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4. | கண்காணிப்பிற்கான நிறுவன ரீதியிலான பொறிமுறைகள் | 4.1 | சித்திரவதையை தடுத்தல், விசாரித்தல் மற்றும் இல்லாமலாக்குதல் | 4.1.a | சித்திரவதை தொடர்பான விசாரணைகள் மற்றும் அதனைத் தடுத்தலுக்கான நடவடிக்கைகள் பற்றிய செயற்திறன்மிகு கண்காணிப்பிற்கான தேவை | பின்வருபவற்றை உறுதிப்படுத்துவதற்காக சித்திரவதை தொடர்பான HRC யின் ஆணையினையும் கவனக் குவிப்பினையும் வலுப்படுத்தல்<br>1) செயற்திறனுடனும் சுயாதீனமாகவும் செயற்படத் தேவையான வளங்களைக் கொண்டுள்ளது<br>2) சட்டத்தினை அமுல்படுத்தும் அதிகாரிகளினால் நிகழ்த்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படும் சித்திரவதை மற்றும் மோசமான நடத்துகை பற்றிய முறைப்பாடுகளினது விசாரணையினைத் தொடர்ச்சியாகக் கண்காணித்தல்<br>3) சித்திரவதையை தடுப்பதற்காக உரிய நடவடிக்கையினை எடுத்தல் | HRCSL செயற்பாடுகளில் சித்திரவதை ஒரு பிரதான கவனக் குவிப்பாகும் | +3 மாதங்கள் | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | 4.1.b | HRCSLற்கு வரும் சித்திரவதை பற்றிய முறைப்பாடுகள் பற்றிய துரிதமானதும் செயற்திறன்மிக்கதுமான பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக போதிய கட்டமைப்பு, வளங்கள் மற்றும் ஏற்பாடுகள் போதாமலிருத்தல் | HRCSL ற்கு முறைப்பாடுகளைச் செய்பவர்களுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றக்கூடிய 24 மணிநேர உடனடி தொலைபேசிச் சேவை நிலையங்களை அமைத்தல் | வளங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன | +1 வருடம் | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | | | துரிதமானதும் செயற்திறன்மிக்கதுமான பின்னூட்டல் நடவடிக்கைகளுக்காக நடைமுறை சார்ந்த வழிகாட்டல்களை உருவாக்குதல் | தொலைபேசிச் சேவை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன | | |
| | | | | | | | வழிகாட்டல் உருவாக்கப் பட்டுள்ளது | | |
| | | | | 4.1.c | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தடுப்புக்காவல் நிலையங்களுக்கு போதியளவு திடீர் விஜயங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை | அலுவலக நேரங்கள் தவிர்ந்த நேரங்களில் திடீர் விஜயம் செய்தலை அறிமுகம் செய்தல். | அலுவலக நேரங்கள் தவிர்ந்த நேரங்களில் திடீர் விஜயம் செய்தலை பதிதல் | +3 மாதங்கள் | |
| | | | | | | | விஜயங்களின் எண்ணிக்கை | +3 மாதங்கள் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5. | சித்திரவதை பற்றிய தரவுத் தளம் ஒன்றினை நிறுவுதல் | 5.1 | இலங்கையில் நிகழும் சித்திரவதைச் சம்பவங்கள் பற்றிய உண்மையான பதிவு | 5.1.a | சித்திரவதை நிகழ்வு வீதம் பற்றிப் போதிய தகவல்கள் இல்லாமை | அ) கட்டுக்காவலில் அல்லது தடுத்து வைக்கப்படுகையில் நிகழும் சித்திரவதைச் சம்பவங்கள், பாதிப்புக்குட்பட்டவர்கள் மற்றும் பாலியல் வன்முறைகள் அடங்கலாக குற்றத்தினை நிகழ்த்துபவர்கள் பற்றிய தரவுத் தளத்தினை உருவாக்குதல் | தரவுத் தளம் உருவாக்கப்பட்டுள்ளது | + 1 வருடம், நடைபெற்று வருவது. | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | | | ஆ) சித்திரவதை பற்றிய முறைப்பாடுகளை குற்றச்செயல், பால்நிலை, வயது மற்றும் இனத்துவம் ஆகியவற்றினடிப்படையில் வேறுபடுத்துதல் | வேறாக்கப்பட்ட தரவுகள் சேகரிக்கப்பட்டன. | | |
| | | | | | | இ) சித்திரவதை தொடர்பான விசாரணைகள், வழக்குகள், தண்டனைகள் அல்லது எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் | தகவல்கள் இடக்கக் கூடியதாகவுள்ளன | | |
| | | | | | | ஈ) உயர் நீதி மன்றம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் அவற்றினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் எண்ணிக்கை பற்றிய தகவல் | | | |
| 6. | சட்ட நடவடிக்கைகளில் இருந்து விலக்குப் பெறும் விடயத்தினை ஆராய்ந்து தீர்த்தல் | 6.1 | சித்திரவதைச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அரசாங்க உத்தியோகத்தர்கள் சட்ட நடவடிக்கைகளிலிருந்து விலக்குப் பெறுவதற்கான அவகாசத்தினைக் குறைத்தல் | 6.1.a | போதிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் இன்மையும், சித்திரவதைக் குற்றச் செயல்களை இழைப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமையுமே சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதிலிருந்து விலக்குப் பெறும் கலாசாரத்திற்கு இட்டுச் செல்கின்றது | சித்திரவதை செய்பவர்களுக்கெதிராக வழக்கு தொடருதல் தொடர்பாக வழக்கறிஞர்களுக்கு பயிற்சி வழங்கல் | வெற்றிகரமான வழக்குகளின் விகிதாசாரத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. | தற்பொழுது நடைபெற்று வருபவை | சட்டமா அதிபர் திணைக்களம் |
| | | | | | | HRCSL இனால் கண்காணிக்கப்படும் சித்திரவதைகள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு எதிராக உள்நிலை ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையை உறுதி செய்தல் | ஒழுக்காற்று நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன | தற்பொழுது நடைபெற்று வருபவை | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு |
| | | | | | | தடயவியல் துறையில் பயிற்சி உள்ளடங்கலாக நீதிபதிகளுக்கான பயிற்சிகளை நடாத்தல் | திறமையான முறையில் சித்திரவதை வழக்குகள் முகாமை செய்யப்படுதல் அதிகரித்துள்ளது | தற்பொழுது நடைபெற்று வருபவை | நீதிச்சேவை ஆணைக்குழு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | சித்திரவதையின் பின் விளைவுகள் குறித்த விழிப்புணர்வினை அதிகரித்தல் | பின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு பற்றிய கணிப்பீடு. | வருடாந்த அடிப்படை யில் தற்பொழுது நடைபெற்று வருபவை | பாதுகாப்பு அமைச்சு |
| | | | | | | சித்திரவதைகளில் அரசாங்க உத்தியோகத்தர்கள் ஈடுபட்டால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகளின் எண்ணிக்கை | தற்பொழுது நடைபெற்று வருபவை | தொடர்புடைய அமைச்சுக்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழு |
| | | | | 6.1.b | பதவி உயர்வுகளை வழங்காமை மற்றும் ஏனைய நடவடிக்கைகள் மூலம் மோசமாக நடந்து கொள்ளும் அரசாங்க அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்குவதற்குப் பொறிமுறைகள் இல்லாமை. | HRCSL இனால் சித்திரவதைக்கெதிரான குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்ட அதிகாரிகளுக்கெதிராக அரச நிறுவனங்களால் தண்டனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காக ர்கூஊளுடு சட்டத்தினை திருத்துதல் | சட்டம் திருத்தப்பட்டுள்ளது | +1 வருடம் | சனாதிபதி செயலகம். |
| | | | | 6.1.c | உயர் அதிகாரிகளால் தாமே அல்லது அவர்களது சகாக்களால் இழைக்கப்படும் சித்திரவதைகள் தொடர்பாக அவர்களிடையே வகைப்பொறுப்பின்மை | நிபுணைத்துவம் மிக்க குழுவொன்றின் ஊடாக உத்தரவுகளுக்கான பொறுப்புகள் நடைமுறையில் குற்ற சட்டவிதிகளுக்குட்பட்டுள்ளதா, அப்படி இல்லையெனில் இலங்கையின் குற்ற சட்ட வரம்புக்குள் உத்தரவுகளுக்கான பொறுப்புகளை கொண்டுவருவதற்கு என்ன முறைகளை முன்வைக்கலாம் என்பது குறித்து நிபுணர் குழுவொன்றினைக் கொண்டு ஆய்வொன்றினை நடாத்துதல் | ஆய்வு நடாத்தப்பட்டுள்ளது | +1 வருடம் | சட்ட ஆணைக்குழு |
| | | | | | | | ஆய்வின் பரிந்துரைகளின் படி | +1 வருடம் | நீதி அமைச்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7. | பெண்கள், சிறுவர்களுக்கான விசேட பாதுகாப்பு | 7.1 | கட்டுக்காவலில் அல்லது தடுப்புக் காவலில் உள்ள அனைவரதும் குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் | 7.1.a | கட்டுக்காவலில் அல்லது தடுப்புக் காவலில் இருந்த போது ஏற்பட்ட பாலியல் வன்முறைகள் தொடர்பான தகவல்களின் மற்றும் தரவுகளின் பற்றாக்குறை | கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில் கட்டுக்காவலில் அல்லது தடுப்புக் காவலில் இருந்தபோது நடத்தப்பட்ட பாலியல் வன்முறைகள் தொடர்பான ஆய்வொன்றினை மேற்கொள்ளல் | ஆய்வு நடத்தப்பட்டது | +6 மாதங்கள் | நீதி அமைச்சு<br><br>சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் மேம்பாட்டு அமைச்சு |
| | | | | | | தடுப்புக்காவலில் உள்ளவர்களின் உரிமைகள் தொடர்பாக, குறிப்பாக பெண்களின் உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வினை அதிகரிப்பதற்காக நிகழ்ச்சிகளை நடாத்துதல் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | | |
| | | | | | | ஆய்வுகளின் அடிப்படையில் தேவையான அளவு பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தடுப்புக் காவல் நிலையங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதை உறுதி செய்தல் | தடுப்புக் காவல் நிலையங்களில் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ள பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | பயிற்சிகளின் ஊடாக சட்ட அமுலாக்க அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு பால்நிலை தொடர்பான கூருணர்வினை மேம்படுத்தல் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8. | புனர்வாழ்வு மற்றும் நஷ்டஈடு | 8.1 | சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விரிவான நஷ்டஈடு வழங்கல் திட்டம் | 8.1.a | சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உரிய புனர்வாழ்வு நடவடிக்கைகள் இல்லாமை | சுகாதார மற்றும் உளநல சுகாதார அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளில் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவள ஆலோசனை தொடர்பான தொகுப்பினை உள்ளடக்கல் | சித்திரவதை பற்றிய மொடியுல்களைக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | + 6 மாதங்கள் | சுகாதார அமைச்சு |
| | | | | | | சட்ட வைத்திய அதிகாரிகள் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவ சிகிச்சைக்குப் புறம்பாக உளவள ஆலோசனைக்கு ஆற்றுப்படுத்துவதை உறுதிசெய்வதற்காக ஆற்றுப்படுத்தல் முறையொன்றினை ஏற்படுத்தல் | ஆற்றுப்படுத்தல் முறை உருவாக்கப்பட்டுள்ளது | + 3 மாதங்கள் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | உளவள ஆலோசனையாளர்களுக்கும் வைத்தியர்களுக்குமான நடத்தப்பட்ட ஆற்றுப்படுத்தல்களின் எண்ணிக்கை | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| | | | | | | அனைத்து தேசிய நிறுவனங்களாலும் நடாத்தப்படும் உளவள ஆலோசனையாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளின் பாடத்திட்டத்தினை மீளாய்வு செய்தலும் சித்திரவதை தொடர்பான தொகுப்பினை உள்ளடக்கலும் | மீளாய்வு செய்யப்பட்டுள்ள பாடத்திட்டங்களின் எண்ணிக்கை | +1 வருடம் | சமூக சேவைகள் அமைச்சு |
| | | | | | | | சித்திரவதை பற்றிய மொடியுல்களைக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | +6 மாதங்கள் | |
| | | | | 8.1.b | சித்திரவதைக்கான நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையிலுள்ள நீண்ட சலிப்பூட்டும் நடைமுறைகள் | தற்போதைய நட்டஈட்டு முறைமை பற்றி ஆய்வு நடத்தி முன்னேற்றத்திற்காக சட்டவாக்க ரீதியான அல்லது வேறு பரிந்துரைகளை மேற்கொள்ளல் | ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது | +6 மாதங்கள் | சட்டமா அதிபர் திணைக்களம்<br>அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு |
| | | | | | | ஆய்வின் அடிப்படையில் தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன | நட்டஈட்டுச் செயன்முறை திருத்தப்பட்டுள்ளது | +1 வருடம் | நீதி அமைச்சு |
| | | | | | | சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதுமான நஷ்டஈயீட்டை வழங்குவதற்கு நீதித்துறையினைக் கூருணர்வாக்கல் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | தற்பொழுது நடைபெற்று வருபவை | நீதிச்சேவை ஆணைக்குழு |
| | | | | | | | இலக்கு வைக்கப்பட்ட நீதித்துறை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | | |
| 9. | சித்திரவதைக் கெதிரான சமவாயம் | 9.1 | சித்திரவதைக்கெதிரான சமவாயத்தின் கீழ் உள்ளடக்கப்படுவதை விஸ்தரித்தல் | 9.1.a | சமவாயத்தின் 21 ஆம் 22 ஆம் உறுப்புரைகளின் கீழ் பிரகடனப்படுத்துவதற்கான தேவை | சமவாயத்தின் 21 ஆம் 22 ஆம் உறுப்புரைகளின் கீழ் பிரகடனப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆய்வொன்றினை நடாத்துதல் | ஆய்வு நடாத்தப்பட்டுள்ளது | +1 வருடம் | வெளிவிவகார அமைச்சு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 9.1.b | சித்திரவதைக்கெதிரான சமவாயத்தின் தெரிவுக்குரிய மரபொழுங்கில் தரப்பல்ல | தெரிவுக்குரிய மரபொழுங்கில் தரப்பாவதற்கான வாய்ப்புகள் குறித்து பரிசோதித்தல் | ஆய்வு நடாத்தப்பட்டுள்ளது | +1 வருடம் | வெளி விவகார அமைச்சு |
| 10. | வெளிநாடுகளில் சித்திரவதையினால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கையர்கள். | 10.1 | வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் சித்திரவதைக்குள்ளாவதிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல் | 10.1.a | வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் மீதான சித்திரவதை | சித்திரவதைக்குள்ளான வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு தூதரகப் பாதுகாப்பு மற்றும் சட்ட பிரதிநிதித்துவம் போன்றவற்றை உறுதி செய்தல் | செயன்முறை உருவாக்கப்பட்டுள்ளது | +1 வருடம் | வெளிவிவகார அமைச்சு |
| | | | | | | சித்திரவதைக்கு எதிரான சமவாயத்தில் (CAT) ஒரு நாடு கைச்சாத்திட்டிருந்தால் அங்கு சித்திரவதைக்குட்படும் இலங்கையர்களை பாதுகாப்பதற்கு சட்டம் நிறைவேற்றப்படுதலை உறுதி செய்தல் | CAT கமிட்டி அல்லது சித்திரவதைக்கெதிரான விசேட தூதுவரிடம் மனுத்தாக்கல் செய்தல் | தற்பொழுது நடைபெற்று வருபவை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் உரிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் உரிமைகள்

பெண்களுக்கெதிரான அனைத்து வடிவிலுமான பாகுபாட்டினை முடிவுக்குக் கொண்டுவருதல் தொடர்பான ஐநா சமவாயத்தின் (CEDAW) ஓர் அரச தரப்பாக இலங்கை மாறுவதற்கு பல தசாப்தங்களுக்கு முன்பே பால்நிலைச் சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் கடப்பாடு பூண்டுகொண்டது. வாக்களிப்பதற்கான உரிமையினையும் பாராளுமன்ற உறுப்பினர்களாக வருவதற்கான உரிமையினையும் ஆண்களுடன் சேர்ந்து பெண்கள் 1931ம் ஆண்டிலே பெற்றுக்கொண்டனர். பால் அடிப்படையில் பாகுபாடு இல்லாமல் சகல பிரசைகளுக்கும் சமமான உரிமைகளை இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு உத்தரவாதப்படுத்துகின்றது.

தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை இலங்கை ஒருங்கிணைத்துள்ளது. இதன் வெற்றியாக அடிப்படைக் கல்வியில் சர்வதேச பால்நிலைச் சமததுவத்திற்கு இணையான நிலை எட்டப்பட்டது. 2006ம் ஆண்டிலே அடிப்படைக் கல்வியில் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் இடையிலான விகிதாசாரமானது 99% கக் காணப்பட்டது. 15-24 வயதிற்கிடைப்பட்ட சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் எழுத்தறிவு வீதமானது ஆண்கள் பெண்கள் என சகல துறைகளிலும் 95மூனை எட்டியுள்ளது. பல்கலைக்கழகம் செல்பவர்களில் 113% னோர் பெண்களாக இருக்கின்றனர். தொழிற்துறையிலே ஆசரியர்களாக இருப்பவர்களில் 69%னோர் பெண்களாக இருக்கின்றனர். சுகாதாரப் பராமரிப்பினை அடைந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றமையினால் பிரசவத்தின்போதான இறப்பு வீதமானது 1000 பிறப்புக்களுக்கு 11. எனவும், சிறுவர் இறப்பு வீதமானது 100000 பிறப்பிற்கு 39.3 எனவும் காணப்படுகின்றன. இவை மிலேனியம் இலக்கிற்கு நிகரானவையாகும்.

CEDAW செயற்குழுவின் முடிவான கருத்துக்களுக்கு பதிலளிக்குமுகமாக இலங்கை அரசாங்கமானது 1948ம் ஆண்டின் பிரசைகள் சட்டத்தில் அடங்கியுள்ள பால்நிலைப் பாகுபாடு மிகு ஏற்பாடுகளை அகற்றுவதற்காக அதனைத் திருத்தியது. மேலும் 2005ம் ஆண்டின் 34ம் இலக்க குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தினையும் இயற்றியது. அரச துறை தொழில்வாய்ப்புக்களை ஒழுங்குபடுத்துகின்ற தாபனக் கோவையினைத் திருத்தி பிரசவ விடுப்பினை அரை நாள் சம்பளத்திற்கு 84 நாட்களினாலும், சம்பளமின்றி மேலும் 84 நாட்களினாலும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுப்புக்களை எடுத்தது.

புலம்பெயர் பெண்களின் நலனோம்புகையும் முன்னுரிமை வழங்கப்பட்ட மற்றுமோர் பரப்பாகும். பெண்களின் மத்தியில் நிலவும் வேலைவாய்ப்பின்மையினை அகற்றுவதற்கும் இலங்கை அரசாங்கம் பல முயற்சிகளை எடுத்துள்ளது. இதிலே மோதலினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் மோதலினால் விதவையானோர் மற்றும் தனித்த பெண்கள் ஆகியோர் மீது விசேட கவனம் குவிக்கப்பட்டது. இந்தச் சூழமைவில் இவர்கள் தம் வாழ்வாதாரங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு சுய வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் இவர்களுக்கு உதவுவதற்கு அரசாங்கம் சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

பொருத்தமான நடவடிக்கைகள் மூலம் பெண்களின் உரிமைகளை அதிகரித்து வலுப்படுத்துவதில் இந்தத் தேசிய செயற்திட்டத்தில் உள்ள பெண்கள் பற்றிய முன்னுரிமைப் பரப்புக் கவனம் குவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சுகாதாரம் | 1.1 | கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மத்தியில் மேம்படுத்தப்பட்ட போஷாக்கு | 1.1.a | கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மத்தியில் போஷாக்கின்மை | கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தொடர்பாக தற்போதுள்ள நிகழ்ச்சித்திட்டங்களை வலுப்படுத்தி ஒழுங்கமைத்தல். | மேம்படுத்தப்பட்ட போஷாக்கு நிலை | 3 வருடங்கள் | சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சபைகள் |
| | | 1.2 | மேம்படுத்தப்பட்ட இனவிருத்தி சுகாதார சேவை மற்றும் கருத்தடைச் சேவை | 1.2.a | இனவிருத்தி மற்றும் கருத்தடை சுகாதார சேவைகள் தொடர்பாக தேசிய சுகாதார கொள்கையொன்றினை நிறைவேற்றுவதில் பிராந்திய ரீதியில் காணப்படும் சமமின்மை | ஆய்வொன்றினை மேற்கொள்வதன் ஊடாக இனவிருத்தி சுகாதார சேவைகளில் காணப்படும் சமமின்மைகளை அடையாளங்கண்டு, அச் சமமின்மைகளை அகற்றுவதற்காக பொருத்தமான நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தல். | ஆய்வறிக்கை கிடைக்கக்கூடியதாக உள்ளது | +1 வருடம் | |
| | | | | | | | இனவிருத்தி சுகாதாரம் தொடர்பான மேம்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்கள் | +3 வருடங்கள் | |
| | | 1.3 | தகாத உறவுகொள்ளல், பாலியல் பலாத்காரங்களால் ஏற்படுகின்ற கருத்தரிப்புக்கள் மற்றும் இயற்கைக்கு மாறான பிறப்புக்கள் போன்றவற்றை மருத்துவ முறையில் இல்லாது செய்தலைக் குற்றமற்றதாக்குதல் | 1.3.a | தகாத உறவுகொள்ளல், பாலியல் பலாத்காரம் போன்றவற்றாலான கருத்தரிப்பு அல்லது இயற்கைக்கு மாறான பிறப்புக்கள் போன்றவற்றை மருத்துவ முறையில் இல்லாது செய்தல் சட்டவிரோத குற்றச் செயலாகும் | தண்டனைச் சட்டத்தில் தேவையான திருத்தங்களை முறைப்படுத்தி சட்ட இயற்றத்திற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | தண்டனைச் சட்டக் கோவை திருத்தப்பட்டது. (திருத்தம்). சட்டமூலம் உருவாக்கப்பட்டது. | +2 வருடங்கள் | நீதி அமைச்சு மற்றும் சட்ட ஆணைக்குழு |
| | | | | | | மேற்கூறப்பட்ட மாற்றங்களை கொள்கை அமைப்பாளர்கள் அடங்கலாக பல்வேறு பங்கீட்டாளர்களுடன் இணைந்து ஒத்துழைப்பினை விஸ்திரப்படுத்தல் | கொள்கை அமைப்பாளர்களுடனான பேச்சுவார்த்தை | +1 வருடம் | நீதி அமைச்சு |
| | | | | | | அமைச்சரவை அனுமதியினை பெற்று சட்டமூலத்தைப் (bill) பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | சட்டமூலத்தினைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் | +2 வருடங்கள் | |
| | | 1.4 | தேவையற்ற கருத்தரிப்புக்களை குறைக்கும் நோக்கிலான கருத்தடை முறைமைகள் தொடர்பான மேம்படுத்தப்பட்ட விழிப்புணர்வு | 1.4.a | பாதுகாப்பற்ற கருக்கலைப்பு நிலவுதல் | பொருத்தமான குழுவினருக்கான பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் | பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்களை குறைத்தல் | +3 வருடங்கள் | கல்வி அமைச்சு<br>சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு<br>சுகாதார அமைச்சு |
| | | | | | | | கருத்தடை முறைகளின் அதிகரிப்பு | | |
| 2 | பொருளாதார வலுவூட்டல் | 2.1 | பெண்கள் மத்தியில் உழைக்கும் ஆற்றலை அதிகரித்தல் | 2.1.a | வறியவர்களில் கணிசமானவர்கள் பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் | பெண்களை வலுவூட்டல் மற்றும் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவை மீதான தற்போதைய முன்னெடுப்புக்கள் கிராமிய மற்றும் பெருந்தோட்டத் துறைகளிலுள்ள பெண்களிலும் பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களிலும் தனித்த பெண்களிலும் அங்கவீனமான பெண்களிலும் ஏனைய அனுகூலம் கிட்டாத குழுக்களிலும் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை மதிப்பிடல் | மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது | +1 வருடம் | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு<br>கல்வி அமைச்சு<br>பொருளாதார அபிவிருத்தி அமைச்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | | இலக்கு | | விடயம் | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | கால சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மதிப்பீட்டினடிப்படையில் வறிய பெண்களின் பிரச்சினைகளை உரிய முறையில் தீர்த்தல் | இத்துறையில் வறுமைக்கு கோட்டிற்குக் கீழ் வாழும் பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களின் விழுக்காடு | +2 வருடங்கள் | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு<br>பொருளாதார அபிவிருத்தி அமைச்சு |
| 3 | தொழில் | 3.1 | வேலைவாய்ப்பின்மையினைக் குறைத்தலும் தொழில் புரியும் பெண்களின் தொழில் நிலைமைகளை முன்னேற்றலும் | 3.1.a | ஆண்களுடன் ஒப்பிடுகையில் வேலைவாய்ப்பற்ற பெண்கள் அதிக அளவிற்குக் காணப்படுதல் | வேலை வாய்ப்பற்ற பெண்களுக்கு வாய்ப்புக்களையும் திறன்களையும் மேம்படுத்தல் அத்துடன் தொழில் புரியும் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினை பற்றி ஆய்வினை நடத்துதல் | பெண்கள் மத்தியில் வேலை வாய்ப்பின்மை குறைந்துள்ளது<br>ஆய்வு நடத்தப்பட்டது | +2 வருடங்கள் மற்றும் தற்பொழுது நடைபெற்று வருபவை | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு |
| | | 3.2 | தனியார் துறையினைச் சேர்ந்த இனவிருத்திக்கான வயதுக் குழுவைச் சேர்ந்த பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான கொள்கை | 3.2.a | தனியார் துறையினைச் சேர்ந்த இனவிருத்திக்கான வயதுக் குழுவைச் சேர்ந்த பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் | பாரபட்ச நிலையினை இல்லாதொழிப்பதற்கான விதிகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய வகையிலான கொள்கையொன்றினை தனியார் துறைக்காக ஆலோசனையுடன் கூடிய செயன்முறையினூடாக ஒழுங்கு செய்தல் | கொள்கையானது ஆலோசனையுடன் கூடிய செயன்முறையினூடாக ஒழுங்கு செய்யப்பட்டு தனியார் துறையினரால் உள்வாங்கப்பட்டுள்ளது | +3 வருடங்கள் | ஊழியர் சம்மேளனம்<br>வர்த்தக சம்மேளனம்<br>முதலீட்டுச் சபை |
| 4 | பெண்களுக்கு எதிரான வன்முறை | 4.1 | பெண்களுக்கெதிரான வன்முறையினை குறைத்தல் | 4.1.a | பெண்களுக்கெதிரான வன்முறை அதிக அளவில் நிலவுதல் | வன்முறைக்கும் அமுல்படுத்தல் இடைவெளிக்கும் பங்களிப்புச் செய்கின்ற காரணிகள் யாவை என்பதை அடையாளம் காண்பதற்கு பெண்களின் பாதுகாப்பினை அதிகரிப்பதற்குத் தேவையான தற்போதுள்ள சட்டங்களையும் சமூகப் பிரச்சினைகளையும் மீளாய்வு செய்தல் | மீளாய்வின் மீதான அறிக்கை உள்ளது | +1 வருடம் | நீதி அமைச்சு<br>பாதுகாப்பு அமைச்சு<br>சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு |
| | | | | | | மீளாய்வினை அடிப்படையாகக் கொண்டு அமுல்படுத்தலினை மிகவும் செயற்றிறன் மிக்கதாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் ஆக்குவதற்காக தேவையான மாற்றங்களை அறிமுகப்படுத்தல் | மாற்றங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன | +2 வருடங்கள் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | விடயம் | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | நீதி தொடர்பான செயற்பாட்டில் நிர்வாகம் வகிக்கும் அனைத்து பங்காளர்களுக்கும் பயிற்சி நிகழ்ச்சிகளின் போது பெண்களுக்கெதிரான வன்முறைகளுடன் தொடர்புடைய சட்டத் திரட்டை உள்ளடக்குதல் (சட்ட அமுலாக்கம், வைத்திய சட்டம், சட்டம், சமூக சேவை மற்றும் வேறு பொருத்தமான உத்தியோகத்தர்கள்) | பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மொடியுள்கள்<br>1) பொலிஸ் உத்தியோகத்தர்கள்<br>2) நீதித்துறை உத்தியோகத்தர்கள்<br>3) வைத்திய அதிகாரிகள்<br>பொதுச் சேவையில் உள்ள சமூக சேவையாளர்கள் | +1 வருடம் | |
| | | | | HIV உட்பட STI யினை பரப்புவதைத் தடுப்பதற்காகப் பயன்படுத்தக்கூடிய நடைமுறையிலுள்ள தண்டனைச் சட்ட நிபந்தனைகள் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தல் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை (போதிய பிராந்திய நிகழ்ச்சித்திட்டங்களுடன்)<br>இலக்கு வைக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை<br>இலக்கு வைக்கப்பட்டவர்களின் குடிசனப் பரம்பல் விபரம் | தற்பொழுது நடைபெற்று வருபவை | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு |
| | | | | குற்றச் செயல்கள் தொடர்பாக பால்நிலை ரீதியாக வேறாக்கப்பட்ட தகவல்களின் சேகரிப்பினை அத்துடன் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கைகளை எடுத்தல் | பால் நிலை ரீதியாக வேறாக்கப்பட்ட தகவல்கள் உள்ளன மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன | +2 வருடங்கள் | பொலிஸ் திணைக்களம்<br>சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு |
| | | | | தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களைக் கவரும் விதமாக பெண்கள் மற்றும் சிறுவர் கருமபீடங்களின் தரத்தினை உயர்த்துதல் | பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவில் முழுமையாக உத்தியோகத்தர்கள் | +1 வருடம் | பொலிஸ் திணைக்களம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | விடயம் | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | செயல் நிறைவேற்றுகையினை முன்னேற்றுவதற்காக போதுமான வளங்கள் மற்றும் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்களினைக் கொண்டு பொலிஸ் நிலையங்களிலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவினை பலப்படுத்துதல் | உத்தியோகத்தர்கள் (W&C) யில் அர்ப்பணிப்பு மிகுந்த முழு நேர சேவையில் ஈடுபட்டுள்ளனர்<br>வளங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன | +3 வருடங்கள் | |
| | | | | MCDWA மற்றும் WCDs ற்கு இடையில் ஒருங்கிணைப்புப் பொறிமுறையினை நிறுவுதல். இது சமுதாயத்தினை அடைவதுடன் உள சமூக ஆதரவிலும் கவனம் குவிக்கின்றது | பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது | +1 வருடம் | பொலிஸ் திணைக்களம்<br>சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு |
| | | | | 2005 ஆம் ஆண்டு குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்துக்கு ஆதரவான செயற் திட்டத்தினை அமுல்படுத்தல் | குடும்ப வன்முறை தடுப்புச் செயற் திட்டத்தின் சில இலக்குகள் அடையப்பட்டுள்ளன | வருடாந்தம் | |
| | | | | அரசாங்க நிறுவனங்களில் பாலியல் தொந்தரவுகளுக்கு எதிரான கொள்கையினை மீளாய்வு செய்து அமுல்படுத்தல் | பாலியல் தொந்தரவுகளுக்கு எதிரான கொள்கை தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | +6 மாதங்கள் | |
| | | | | தனியார் துறையில் பாலியல் தொந்தரவுகளுக்கு எதிரான செயற்திறன்மிகு கொள்கையினை உருவாக்கி அமுல்படுத்தல். குறை தீர்த்தல் செயன்முறை உள்ளடங்கலாக | தனியார் துறையில் பாலியல் தொந்தரவுகளுக்கு எதிரான கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுலில் உள்ளது | +1 வருடம் | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு<br>இலங்கை தொழிலாளர்கள் சம்மேளனம் மற்றும்<br>வர்த்தகர் சங்கம் ஆகியவற்றுடன் சேர்ந்து |
| | | | | தனியார் துறையில் பாலியல் தொந்தரவுகளுக்கு எதிரான கொள்கை அமுல்படுத்தல் குறித்து கண்காணிப்பு மேற்கொள்ளல் | கண்காணிப்புச் செயன்முறை அமுலில் உள்ளது | +1 வருடம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | காலச் சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பெண்களிற்கெதிரான வன்முறையினை எதிர்ப்பதற்கான ஒரு வழியாகவும் பெண்களை வலுவூட்டுவதற்காக பெண்களின் வகிபாத்திரம் மற்றும் அந்தஸ்து பற்றிச் சாதகமான மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்காகவும் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் உருவாக்குவதற்காக தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களில் முகவர்களுக்கிடையிலான செயன்முறையொன்றினை நிறுவுதல் | முகவர்களுக்கிடையிலான பொறிமுறைகள் அமுலிலுள்ளன | +1 வருடம் | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு |
| | | | | | | | திட்டங்கள் உள்ளன | +2 வருடங்கள் | |
| | | | | | | பெண்களிற்கெதிரான வன்முறையினை எதிர்ப்பதற்கான ஒரு வழியாக பெண்களின் வகிபாத்திரம் மற்றும் அந்தஸ்து பற்றிச் சாதகமான மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்காக உபாய மார்க்கங்களை உருவாக்குவதற்கு ஊடகத்தினை ஈடுபடுத்துதல் | ஊடக உபாய மார்க்கம் நடைமுறையிலுள்ளது | +2 வருடங்கள் | தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு |
| 5 | அரசியல் பிரதிநிதித்துவம் | 5.1 | பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளில் ஆகக் குறைந்தது 30% பிரதிநிதித்துவம். | 5.1.a | உள்ளூர்,மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் தெரிவு செய்யப்படும் அமைப்புக்களில் பெண்கள் குறைந்த அளவிற்குப் பிரதிநிதித்துவம் செய்யப்படல் | பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்குப் பொருத்தமான நியதிச் சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தல் | விழுக்காட்டுப் பரதிநிதித்துவம் அடையப்பட்டுள்ளது | +2 வருடங்கள் | நீதி அமைச்சு |
| | | | | | | பலனுள்ள வகையில் செயற்படுவதற்காக தமது ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்வதற்காக பெண் பிரதிநிதிகளுக்கான ஆற்றல்களை கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சிகளை அறிமுகஞ் செய்தல் | நிகழ்ச்சிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கை | தற்பொழுது நடைபெற்று வருபவை | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு |
| 6 | பாரபட்சம் | 6.1 | பாகுபாடு மிகு சட்டங்கள்/ கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை இல்லாதொழித்தல். | 6.1.a | பொதுவான பாரபட்சமிகு சட்டங்கள் | தற்போது உள்ள சட்டங்களைப் பயன்படுத்தி பாகுபாடு மிகு சட்டங்களை அடையாளம் காணல். உதாரணமாக HRC ஆய்வினைப் பயன்படுத்தி | பாகுபாடு மிகு சட்டம் அடையாளம் காணப்பட்டு பரப்பப்பட்டுள்ளது | 1 வருடம் | நீதி அமைச்சு |
| | | | | | | பாகுபாடு மிகு சட்டவாக்கத்தினை நீக்குதல் | பாகுபாடு மிகு சட்டங்கள் அடையாளம் காணப்பட்டு திருத்தப்பட்டன அல்லது நீக்கப்பட்டன | 3 வருடங்கள் | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு |
| | | | | 6.1.b | காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் பாகுபாடுமிகு வாரிசுரிமை ஏற்பாடுகள் | ஆண் மற்றும் பெண் வாரிசுகளுக்குச் சமமான வாரிசுரிமைகளை வழங்குவதற்காக காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையைத் திருத்துதல் | திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது | 6 மாதங்கள் | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | கவனத்திற்கு உரிய பரப்பு | இலக்கு | | விடயம் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகை குறிகாட்டி | கால சட்டகம் | பிரதான பொறுப்புக்குரிய முகவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 6.1.c | தெருச்சுற்றல் கட்டளைச் சட்டங்களில் காணப்படும் காலங்கடந்த ஏற்பாடுகள் காரணமாக பெண்கள் துன்புறுத்தப்படுதலும் தடுத்து வைக்கப்படுதலும் | தெருச்சுற்றல் கட்டளைச் சட்டத்தினை இற்றைப்படுத்தல் பற்றி ஆராய்தல் | பாகுபாடான ஏற்பாடுகள் அல்லது பாகுபாடாக நடத்தப்படுதலை நிவர்த்தி செய்வதற்காக கட்டளைச் சட்டம் நீக்கப்பட்டது/ திருத்தப்பட்டது | 6 மாதங்கள் | நீதி அமைச்சு |
| | | | | | | தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்களின் சமூக மீள் ஒருங்கிணைப்பிற்காகவும் மேம்பாட்டிற்காகவும் நடவடிக்கைளை எடுத்தல் | நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டன | 6 மாதங்கள் | |
| | | | | 6.1.d | குடும்பச் சட்ட மறுசீராக்கல் பற்றிய நீதி அமைச்சுக் குழுவின் அறிக்கை | அறிக்கையினை அமுல்படுத்துவதனை துரிதப்படுத்துதல் | அமுல்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது | 3 மாதங்கள் | நீதி அமைச்சு |
| 7 | மோதலினால் பாதிக்கப்பட்ட பெண்கள் | 7.1 | முன்னாள் பெண் போராளிகளை செயற்திறனுடன் சமூகத்தில் மீள் ஒருங்கிணைப்பதை உறுதிப்படுத்தல். | 7.1.a | முன்னாள் பெண் போராளிகள் சமூகத்தில் மீள் ஒருங்கிணைக்கப்படவேண்டிய தேவை | முன்னாள் பெண் போராளிகள் மீள் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக முன்னாள் போராளிகள் மீள் ஒருங்கிணைக்கப்படுவதற்கான அரசாங்கத்தின் திட்டங்களைச் செயற்திறனுடன் தொடர்ந்து அமுல்படுத்துதல்.(போதிய வளங்கள் உள்ளடங்கலாக) | அமுல்படுத்துதல் பொறிமுறை உருவாக்கப்பட்டு அமுலிலுள்ளது | தற்பொழுது நடைபெற்று வருபவை | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு அமைச்சு |
| | | 7.2 | யுத்தத்தினால் விதவைகளாக்கப்பட்டோருக்கான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் உருவாக்குவதை உறுதிப்படுத்துதல் | 7.2.a | பொருளாதார விடயங்கள், காணி மற்றும் வீடமைப்பு உரிமைகள் மற்றும் சுரண்டலுக்கான பாதிப்புறுநிலை ஆகியவற்றின் மீது கவனம் குவிக்கின்ற யுத்த விதவைகள் பற்றிய கொள்கை இல்லாமை | பின்வருவனவற்றை உள்ளடக்குகின்ற யுத்த விதவைகள் பற்றிய கொள்கையினை நாட்டின் சகல பாகங்களிலும் உருவாக்குதல்<br>1) பிரதேச அடிப்படையில் அடையாளம் காணலும்/திட்டமிடலும்<br>2) தொழில் தேவை மற்றும் வாழ்வாதார அபிவிருத்தித் தெரிவுகள் உள்ளிட்ட தேவை மதிப்பீடுகள் | திட்டமிடல் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது | +1 வருடம் | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு |
| | | | | | | | தேவை மதிப்பீடு பூர்த்தியாக்கப்பட்டுள்ளது | | |
| | | | | | | | மதிப்பீட்டினடிப்படையில் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன | தற்பொழுது நடைபெற்று வருபவை | |
| 8 | உள்நாட்டில் இடம் பெயர்ந்த பெண்கள் | தயவுசெய்து உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான பகுதியினைப் பார்க்கவும் | | | | | | | |
| 9 | வழமையான துறைகளில் அடங்காத பெண்கள் | தயவுசெய்து பொருளாதார சமூக மற்றும் கலாசார உரிமைகள் உள்ள பகுதியினைப் பார்க்கவும் | | | | | | | |
| 10 | புலம்பெயர்ந்த பெண் தொழிலாளர்கள் | தயவுசெய்து புலம்பெயர்ந்த பெண் தொழிலாளர்கள் உள்ள பகுதியினைப் பார்க்கவும் | | | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் உரிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் உரிமைகள்

இலங்கையில் உழைக்கும் வர்க்கத்தினரின் இயக்கமானது 1890களில் ஆரம்பித்தது எனலாம். முதலாவது கூட்டு முயற்சியானது 1893ல் நடைபெற்றதாக அறிக்கையிடப்பட்டுளது. இவ்வாறே தொழிற் சங்கம் எனும் ஓர் உறுதியான பாரம்பரியம் இந்த நாட்டிலே பரிணமித்தது. இப் பாரம்பரியமே இலங்கையின் சுதந்திர இயக்கம் வகித்த முக்கியமான வகிபாத்திரத்துடன் பின்னிப்பிணைந்திருந்தது.

20 ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியின் போது, இலங்கைத் தொழிலாளர் நலனோம்புகைச் சங்கமும் இலங்கைத் தேசிய காங்கிரசும் பின்வருவன வழங்கப்படல் வேண்டும் எனத் தீர்மானம் மேற்கொண்டன: தொழிலாளர்கள் ஒன்று கூடுவதற்கான சுதந்திரம், ஆகக் குறைந்த ஊதியம் மற்றும் வேலை நேரம் ஆகியவற்றைத் தீர்மானித்து ஒழுங்குபடுத்தல், சிறுவர் ஊழியத்தை இல்லாதொழித்தல் மற்றும் தொழிலாளர்களுக்கு சிறந்த தொழில் மற்றும் வாழ்நிலைகளை உறுதிப்படுத்தல். ஆரம்பகாலத் தொழிற்சங்கங்கள் சில 1923ற்கும் 1928ற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் உருவாக்கப்பட்டன.

மேற்குறிப்பிடப்பட்ட மாற்றங்கள் பல முக்கியமான தொழில் சட்டங்கள் இயற்றப்படலுக்கு இட்டுச் சென்றன. இவற்றில் அடங்குபவை: 1935ம் ஆண்டின் தொழிற் சங்கக் கட்டளைச் சட்டம், 1935ம் ஆண்டின் ஊழியர் நட்டஈடு கட்டளைச் சட்டம், 1956ம் ஆண்டின் பெண்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கமர்த்தல் சட்டம், 1939ம் ஆண்டின் பிரசவ நலன்கள் கட்டளைச் சட்டம், 1941ம் ஆண்டின் சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம், 1954ம் ஆண்டின் கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் (தொழில் வாய்ப்பினையும் ஊதியத்தையும் ஒழுங்குபடுத்தல்) மற்றும் 1942ம் ஆண்டின் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்.

1950ம் ஆண்டின் கைத்தொழில் பிணக்குகள் சட்டமானது ஒரு முக்கியமான சட்டவாக்கமாகும். இது கைத்தொழில் பிணக்குகளைத் தடுப்பதற்கும் விசாரிப்பதற்கும் தீர்ப்பதற்குமான ஏற்பாடுகளை வழங்குகின்றது. அத்துடன் தொழில் வழங்குனர் மற்றும் தொழில் பெறுனர் ஆகியோருக்கிடையில் சிறந்த உறவைப் பேணும் நோக்கத்துடன் கூட்டுப் பேரம் பேசுதலை ஊக்குவிக்கின்றது.

ILO சமவாயத்திற்கு அமைய இலங்கையானது 40 சமவாயங்களை ஏற்றுக்கொண்டுள்ளது. தேசிய கௌரவமான வேலை செயற்திட்டத்தினை ILO கோட்பாடுகளுக்கமைய அமுல்படுத்திய உலகின் முதலாவது நாடு இலங்கையாகும்

அரசாங்கத் துறையிலுள்ளோருக்கும் தனியார் துறையிலுள்ளோருக்கும் ஓய்வுதிய நலன்களை வழங்குவதற்கு இலங்கை விரிவான சமூகப் பாதுகாப்பு முறைமையினைக் கொண்டுள்ளது. முறைசாராத் துறையிலுள்ளோரின் பாதிப்புறு நிலையினைக் கருத்திற் கொண்டு அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் பல முன்னெடுப்புக்களை எடுத்துள்ளது. முறைசாராத் துறையிலுள்ள விவசாயிகள், மீனவர்கள், சுய தொழில் புரிவோர் ஆகியோருக்கு ஓய்வுதிய நலன்களை வழங்குவதற்கு இரண்டு ஒழுங்குபடுத்தல் அமைப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேசிய செயற் திட்டத்திலுள்ள தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாத்தலின் முன்னுரிமைப் பரப்புக்கள் ஊழியர்களின் உரிமைகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் பல முக்கியான விடயங்களைக் கருத்தில் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | இலக்கு | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | கால சட்டகம் | பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அனைத்து வேலைத் தளங்களிலும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் தொழிற் பாதுகாப்பும் சுகாதார ரீதியான கவனிப்பில் அவர்கள் உள்ளடக்கப்படலும். | 1.a | தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதார சட்டங்களின் மீதான கட்டுப்பாடுகள் | தொழிற் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் தொழில் நலனோம்புகை தொடர்பாகச் சட்டவாக்கமியற்றுதல் | சட்டவாக்கம் இயற்றப்பட்டுள்ளது | +1 வருடம் | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு |
| | | | | ILO சமவாயம் 155னை ஏற்றுக்கொள்ளல் தொடர்பாகக் கவனம் செலுத்துவதற்கு ஆய்வினை நடத்துதல் | ஆய்வு நடத்தப்பட்டுள்ளது (ILO ஒப்பந்தம் ற்றுக்கொள்ளப்பட்டுள்ளது). | செயன்முறையில் | |
| | | | | சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் உள்ளடக்கி அமுல்படுத்தல் மற்றும் கண்காணித்தல் | அமுல்படுத்தலுக்கான சான்று | +1 வருடம் | |
| 2 | தீங்கு விளைவிக்கும் தொழில்களில் இருந்து 15 முதல் 18 வயதானோரைப் பாதுகாத்தல் மற்றும் அவ்வாறான தொழில்களைத் தடைசெய்தல் பற்றிய ILO சமவாயம் 182 அமுல்படுத்தப்படுவதை வலுவாக்குதல். | 2.a | தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதார சட்டங்களின் மீதான கட்டுப்பாடுகள் | செயற்திறன் மீது அமுல்படுத்தலைக் கண்காணித்தல் மற்றும் வழுநீக்கும் நடவடிக்கைகளை எடுத்தல். | பின்தொடரல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | +1 வருடம் மற்றும் தொடர்ந்து நடைபெற்று வருபவை | |
| 3 | கைத்தொழில் பிணக்குகள் தொடர்பாக விரைவாக தீர்வு காணல் | 3.a | பின்வரும் இடங்களில் கைத்தொழிற் பிணக்குகளுக்கு தீர்வு காண்பதிலான தாமதங்கள்:<br>(அ) தொழில் ஆணையாளர்<br>(ஆ) மத்தியஸ்த நிலையம்<br>(இ) தொழில் நியாயசபைகள் | சட்டவாக்க மீளாய்வு, விசேடமாக 2003ஆம் ஆண்டின் 11,12 மற்றும் 13ஆம் இலக்கச் சட்டங்கள்<br>பிணக்குகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறைகளின் தற்போதைய செயல்விதிகளை ஆராய்தல். | தொழில் சட்ட மறு சீரமைப்புக் குழு அறிக்கை | +1 வருடம் | தொழில் உறவு மற்றும் மனித வலு அமைச்சு<br>நீதி அமைச்சு |
| | | | | பரந்தளவில் வேறுபட்ட தடுப்பு நடவடிக்கைகளை பயன்படுத்துவதற்கான இயலுமை குறித்து ஆராய்தல் | | | |
| | | | | பரந்தளவில் வேறுபட்ட தடுப்பு நடவடிக்கைகளை பயன்படுத்துவதற்கான இயலுமை குறித்து ஆராய்தல் | | | |
| | | | | போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல் | | | |
| | | | | தொழில் சட்ட மறுசீரமைப்பு கமிட்டியினால் மேலுள்ள விடயங்கள் தொடர்பாக மீளாய்வொன்றினை செய்தலும் சிபாரிசுகளை செய்தலும் | | | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு |
| 4 | 1971ம் ஆண்டின் 70ம் இலக்க கட்டாய அரச சேவை அறிக்கை | 4.a | கட்டாய சேவைகள் சட்டம் பற்றிய ILO சமவாயத்துடன் இயைபுறுவதனை அனுமதிப்பதற்கு 1961ஆம் ஆண்டின் 70ஆம் இலக்க கட்டாய சேவைகள் சட்டம் காணப்படுதல் | மீளாய்வின் அடிப்படையில் தேவைக்கேற்ப சட்டத் திருத்தங்களைச் செய்தல் | சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன (தேவையெனில்) | +1 வருடம் | பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு |
| | | | | 1961ஆம் ஆண்டின் 70ஆம் இலக்க கட்டாய சேவைகள் சட்டத்தை பரிசீலனை செய்தல் | சட்டங்கள் நீக்கப்பட்டுள்ளன (தேவையேற்படின்) | | |
| 5 | கட்டாயக் கல்வி தொடர்பான தேசிய கொள்கைக்கு உரிய கரிசனை வழங்கி தொழில் புரிவதற்கான ஆகக் குறைந்த வயது மற்றும் தொழிற்சங்கங்களில் இணைவதற்கான உரிமை ஆகியவற்றின் ஒத்திசைவு. | 5.a | தொழிற்சங்கங்களில் இணைவதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை உரிமை குறித்து சட்டத்தில் காணப்படும் வேறுபாடுகள் | கட்டாயக் கல்விக்கான வயதுடன் பொருந்தும் வகையில் சம்பந்தப்பட்ட சட்டவாக்கத்தினை மீளாய்வு செய்தல் | சட்டவாக்கம் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது | +1 வருடம் | தொழில் உறவு மற்றும் மனித வலு அமைச்சு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | இலக்கு | பிரச்சினைகள் | | செயற்பாடுகள் | பிரதான செயல் நிறைவேற்றுகைக் குறிகாட்டிகள் | கால சட்டகம் | பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 6 | முறைசாராத் தொழிற் துறையில் (informal) உள்ளவர்களுக்கு செயற்றிறனுடைய பாதுகாப்பு | 6.a. | முறைசாராத் தொழிற் துறையில் உள்ளோர்களுக்கு பாதுகாப்பின்மை | பாதுகாப்புத் தேவைப்படும் பரப்புக்களை அடையாளம் காண ஆய்வொன்றினை நடாத்துதல் | ஆய்வு அறிக்கை | +1 வருடம் | தொழில் உறவு மற்றும் மனித வலு அமைச்சு |
| | | 6.b. | முறைசாராத் தொழிற் துறையில் உள்ளோர்களுக்கு சமூகப் பாதுகாப்பு போதிய அளவிற்கு வழங்கப்படாமை | முறைசாராத் தொழிற் துறையில் உள்ளடக்கப்பட்டுள்ளோர் என வரையறுக்கப்பட்டோருக்கும் பாதுகாப்பினை விஸ்தரிப்பதற்கு ஆய்வின் முடிவுகளின் படி சிபாரிசுகளை செய்தலும் அமுலாக்கலும் | சிபாரிசுகள் அமுலாக்கப்பட்டுள்ளன | +1 வருடம் | |
